മലയാളി

V2 No 23 6 Jun 1929

JL
ml211, N28 KH
N29.2.23
L8 9058

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலா நிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளி வரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 2.] 1929 ஆ ஜூன் மீ 6ௌ [No. 23.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 441
2. அப்பர் — E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 443
3. ஏமாங்கதத் திளவரசன் (A Novel) — T. N. சேஷாசலம் B.A., B.L. 445
4. மாறன் பாப் பாவினம் (K. நாராயண ரெட்டிகாரு அனுப்பிய பிரதி) 446
5. வில்லி பாரத விளக்கம் — T. S. நடராஜ பிள்ளை B.A, B.L. 448
6. குலசேகரர் — T. P. மீனுக்ஷிசுந்தரன் M.A., B.L. 450
7. கும்பகர்ணன் — R. முத்தையர் 451
8. பட்டினத்துப் பிள்ளையார் — T. R. இராஜகோபால் 453
9. தமிழ்ப் பாடம் 454
10. கம்பராமாயணம் — T. N. சேஷாசலம் B. A, B. L. 456
11. வர்த்தமானம் 459

சந்தாதாரராய்ச் சேர விரும்புவோர் எந்தத் தேதியிலிருந்து சேரலாமாயினும் கட்டுரைகள் பல தொடர்ச்சியாய் வருவதால் முன்னிதழ்களையும் பெற்றுக்கொள்வது நலம். வி. பி யில் அனுப்பச் சொல்வதைக் காட்டிலும், தொகையை மணியார்டர் செய்வதால் செலவு குறையும். ஸிங்கப்பூர் பினங்கு தென்னுப்பிரிக்கா முதலிய புறநாடுகளுக்கு வி. பி யில் அனுப்ப இயலாது. மானேஜர்.

## கலா நிலயம்

### சொற்றொடராரவாரம்

II

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவாருறவு கலவாமை வேண்டினு மோர் வித்தகர். இவ்வகை வஞ்சகக் கள்வரால் வருந் தீமை, கொடியதேனும், ஓரெல்லைக்கு ளடங்கு மளவினை யுடையது. அவ் வஞ்சகரை உறவுபற்றித் தொடர்ந்தவர்களைத் தானே பெரும்பான்மை அத்தீமை வாதிக்கஇயலும். அதுவுமன்றி, ஜனத்தொகை உலகக்கணக்கில் கபடம் ஊன்றிய நெஞ்சினர் பகுதி மிகச் சிறியதே. கைதவக் கள்வராயின், அவர் பொய் ஒருநா ளல்லாக்காலொருநாள் வெளிப்பட்டே தீரவேண்டும். பிறர்க்குக் கேடுசெய்ய நினைத்துப் புறமொன்று வேறே பேசிய கயவனே கேடடைவதும் திண்ணம். தான் கேடு நினைத்ததாலன்றோ தானே கெட்டனன் என்றவொருவுணர்ச்சி தோன்றுவதால் இத்தீயர் ஒவ்வோர் சமயந் திருந்துதலுங் கூடும். இன்னசில எல்லைகள், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலத்தலால் விளையவல்ல தீமைகளுக்கு இருக்கின்றன. மற்று, உள்ளொன்றும் வைக்காமல் புறமொன்று பேசுவார் உறவு கலத்தலால் வியாபிக்கவல்ல விபரீதங்களுக்கு எல்லையில்லை. முன்னவரை வெறுத்து விலக்கவேண்டுமெனின், பின்னவர்க்கு வெருவி விலகுதல் வேண்டும்.

இங்நா ளெங்கெங்கும் பற்பலர் பேசுவனவற்றுள் பெரும்பான்மை உள்ளொன்றும் வையாமல் பிறமொன்றுபேசுஞ் சொற்களேயாகின்றன. நாம், நமதுதேசம் நமதுஜாதி நமதுமதம் நமதுபாஷை, இவையனைய எண்ணிறந்தன "முன்னேற்றம் அடையவேண்டும்" என்று பலபடப் பேசுவோர், தம் உள்ளத்தில் எதனை வைத்துப் பேசுகின்றனர்? இதனை உரைப்போரும் அவ்வுரையைப் பொருளுரையெனக் கேட்டு விவகரிப்பவரும் தம் நெஞ்சிலே கைவைத்து, "நாம், என்ற அந்தத் தன்மைப்பன்மையின் பொருள் யாது; எந்த இலக்ஷணங்களை முன்னிட்டு முன்னேற்றம் அடையவேண்டுகின்றோம். அடையநினைக்கும் அந்த நிலையின் தன்மையென்ன?" என்ற கருத்து ஏதேனும் அங்கு உளதோவென்று ஈச்வரசாக்ஷியாய் ஆராய்ந்து பார்க்கட்டும். அவ்வாறு ஆராய்ந்து பார்க்கையில் ஒன்றிற்குப் பத்து மேன்மேலும், உள்ளத்தில் நினைக்காதவைகளே சொல்லிச்சொல்லி அச்சொற்களின் ஆரவாரத்தினிடையே முடிவு தோன்றுவகை குழப்பிவிடுவதாற் பயனில்லை. அவ்வாராய்ச்சி தர்க்கத்திற்கும் அநுபவத்திற்கும் சரித்திர உண்மைக்கும் விரோதமல்லாததாயிருக்குமாயின், 'முன்னேற்றம்' என்ற அச் சொற்றொடர் உற்பத்தியாகும் இடம், வாய்மாத்திரமே என்பது தெரியவரும். ஒருவர் வாயிலிருந்து வந்ததை மற்றவர் தம்முடைய வாயிலேகொண்டு வழங்கி வரலாகின்றனர்.—இதனால், முன்னேற்றத்திற்கு இடமில்லையென்றுவது அது இயலுவதொன் றன்றென்று

வது கலாநிலயம் கருதி நிற்கின்றதென எண்ணவேண்டா. இக்காலம் 'முன்னேற்றம் முன்னேற்றம்' என முறையிடுமிச் சொற்றொடரைப் பயில்வோர்தம் உரையையும் நடையையும் உற்றுநோக்கி ஆராயுங் காலையில் அன்னர் உள்ளிருந்து இயக்குங் கருத்துத் தர்க்கத்தின் காட்சிக்குப் புலப்படாமையை மட்டுமே இவ்வண்ணம் கூறுகின்றோம்.

இப்படி உள்ளொன்றும் வைக்காமல், வாயிலே பிறந்து வாயிலே வளர்ந்து வாய்நின்று வாய்க்குப் பரவுகின்ற சொற்றொடர், இம் "முன்னேற்றம்" என்பது ஒன்றுமட்டுமே யன்று. இம்முன்னேற்றம் என்னும் பேச்சுத் தற்காலம் பயில்கின்ற பல்வேறு இயக்கங்களையும் தன்னுள் விழுங்கியிருத்தலால் தொகுத்துச் சுட்டும் முறையில் அதனை முதலாக எடுத்துக் காட்டினேம். பொதுஜனங்களுடைய வாயில் ஆரவாரம்செய்து வருகின்ற, "சுயபேச்சை, சுதந்திரம், சமத்துவம் உரிமை, அடிமைஇந்தியா, சுயமரியாதை, ஏழைஇந்தியா, அன்னிய அரசாட்சி, மாதர்விடுதலை, சாதிக்கொடுமை சமயவளர்ச்சி, கல்விவளர்ச்சி, ஒற்றுமை, உடல் பொருள் ஆவி, சட்டத்திருத்தங்கள், ஆசாரச் சீர்திருத்தம், தமிழபிமானம், பண்டைநாள்பழக்கவழக்கங்களென்னும் பேய்,—ஓட்டுரிமை" அன்ன சொற்களும் சொற்றொடர்களும் உள்ளொன்றும் வைக்காமல் புறமொன்று பேசும் வரிசையில் வரலாகின்றனவென்றே கருதுகின்றோம். இச் சொற்றொடர்களுக்குப் பொருளில்லைஎன்று நாம் இயம்புகின்றோம் அல்லோம். பொருளும் உளது, பயனுமுளது; அவைகளின் உண்மையாய பொருளின்படி எய்தவல்ல பயனை மாந்தருட்பலர் இக்காலம் பெற்றிராரகின்றனர் என்பதும் மறுக்கற்பாலதன்று. மற்று, இச் சொற்களையும் சொற்றொடர்களையும் பயின்று அவைகள் குறிக்கும் முன்னேற்றத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் அனைவரும், அவைகளின் பொருளுக்குரிய பயனை உள்ளத்தில் வைத்திருப்பவர் என்று எண்ணுதற்கோ இடமில்லையே யென்பதொன்றே எம் குறை.

இச்சொற்கள் உட்கருத்தோடு வழங்கப்படாமையைக் காட்டும்பொருட்டு ஒவ்வொன்றாக எடுத்திங்குச் சோதிக்க நாம் நினைக்கவில்லை. நம் தலைபங்கங்களின் பற்பல விடங்களில் சுருக்கமா யதனைச் செப்பிவந்துளோம். இவ்விடத்தில், "அன்னிய ஆட்சியால் நாம் அழிந்து போகின்றோம்' என்ற சொற்களைப் பெய்து பெருக்குகின்ற உரைகளின் தன்மையைமாத்திரம் உதாரணமாகப் பார்க்கலாம். அந்நியர் என்பவர் யாவர்? நிறவேறுபாட்டினாலும், பாஷை வேறுபாட்டினாலும், மத வேறுபாட்டினாலும் அல்லது நிலத்தின் எல்லை வேறுபாட்டினாலுமோ, சிலர் அந்நியரென்னுந் தன்மைக்கு உரியவராகின்றனர்? அவ்வாறாயின் யாவர் ஆள்கின்ற ஆட்சி சுயவாட்சி என்பதற் கொத்ததா யமையக் கூடும்? அந்நியனென்ற நினைவைக் கொண்டு பார்க்கப்போனால் ஒவ்வொருவனுக்கும் மற்றவரெல்லாரும் அன்னியர்தானே! அன்னியராயிருப்பவர்களெல்லாம் தம்முடைய லாபத்திற்காக மற்றவரைக் கெடுக்கவே நினைப்பர் என்ற கொள்கை மெய்யாகுமாயின், பிரஜைகளில் ஒவ்வொருவனும் தானே தனக்கு அரசனாயிருந்து ஆண்டுகொண்டாலன்றி வேறு சுயஆட்சி என்பது எங்கிருந்து வரும்? ஆங்கிலேயர் நம்முடைய நன்மைக்காகவே ஆள்கின்றனர் என்று சொல்வது எத்துணைப் பொய்யோ அத்துணைப் பொய் அவர் நம்முடைய தீமையை நாடுகின்றனர் என்று சொல்வதிலும் அடங்கியிருக்கின்றது. ஆங்கிலேயர் ஆட்சியால் நமக்குச் சில கஷ்டங்கள் ஏற்படுகின்றன என்பர். இது அவர் அன்னியராய் இருக்கின்ற காரணத்தால் நேர்கின்றதோ, வேறுதான் காரணமுண்டோ என்றுகருதவேண்டிய விஷயமாம். முதலில், 'நமக்கு' என்ற சொல் யாரைக் குறிக்கின்றது? ஒவ்வொருவரையுந் தனித்தனியாகவா, சிற்சில பகுதியினர்க்கா, அல்லது இந்திய மக்கட் தொகுதிக்கேயோ இங்கிலாந்தின் ஆட்சி இடையூறு செய்கின்றது! ஆயின், ஆங்கிலேயர் இங்கிலாந்தில் அன்னியர்களல்லரே! அங்கு அவர் தம்மைத்தாமே யாண்டுகொள்கின்றனரே. இங்கிலாந்திலிருக்கு மொருவனை யழைத்து அவனுடைய சுகதுக்கங்களை விசாரியுங்கள்; அதே நிலையிலுள்ள நம் இந்தியன் ஒருவனையும் அழைத்து இவனது சுகதுக்கங்களையும் விசாரியுங்கள். பெரும்பாலும் அவையிரண்டும் அளவொத்து நடக்கக் காண்பீர். தொகுதிக் கணக்கில் பார்த்தாலும், காமம் களவு கொலையாதிய தீமைகளால் வருந்துவோரும் வருத்துவாரும் ஏற்றத்தாழ்வில்லாமலிருக்கக் காணலாம். வறுமை மடமை முதலியவைகளும் ஈரிடத்தும் ஒரு படித்தே. மற்று, வறுமையிற் செம்மையும், செல்வத்தில் ஈகையும், பொறையறிவு முதலிய நற்குணங்களும், தெய்வபக்தியும் உடையவராய் வாழ்வோர் இங்குமுளர், அங்குமுளர். இது இவ்வாறிருக்க, அன்னிய அரசாட்சியின்கீழிருக்கும் இந்தியர்க்கும், முற்றிய சுயஆட்சியே புரிந்துகொள்ளும் ஆங்கிலேயர்க்கும், அவ்வரசாட்சி முறையின்காரணமாய் நேர்ந்துள நலம்தீமைகளின் வேறுபாடு எதன்கண் சென்று காண்பது? உண்மை யாதனில், ஜனங்களுடைய சுகதுக்கங்களுக்கும் ஆட்சிமுறையமைப்பிற்கும் ஒருவித சம்பந்தமுமில்லை. காப்புப்படைச் செலவிற்கு ஆங்கிலேயர் அறுபதுகோடி அழித்தாலென்ன, விட்டாலென்ன ! தம் வர்த்தக வளர்ச்சியின் பொருட்டு இந்தியாவைத் தம் கைக்குள் அடக்கிவைத்திருந்தாலென்ன, அவிழ்த்துவிட்டாலென்ன! இதுசெய்து அவர் என்ன சுகம் பெற்றார்; அது செய்யாமல் யார் என்ன சுகம் பெறப் போகின்றனர்? இங்கிருந்து நாமெல்லாம் அங்காந்திருக்கும்படி 'நாகரிகமும்' 'முன்னேற்றமும்' அடைந்திருக்கின்ற அவ்வாங்கிலேயர் சுயஆட்சி யுடையவர்களாயிருந்து இழந்திருப்பதைவிட நாமொன்றும் அதிகமாய் அன்னியஆட்சியால் இழந்துவிடவில்லை. அவர் பெற்றிருப்பதைவிட நாமொன்றும் சுயஆட்சியால் பெறப்போவதுமில்லை. ஏனெனில், சாம்யல் ஜான்ஸன் சொல்லியபடி அரசியல்முறையால் ஒருவனுடைய வாழ்வு ஆவதும் அழிவதும் இயலாத காரியம். இதனையே எமர்ஸனும், "குடிகளின் தன்மைக்கேற்ற அரசியலும் சட்டங்களும் தாமே யமையும்" என்று எடுத்துக் காட்டியுள்ளார். அந்நியஆட்சி, சுயஆட்சி என்ற சொற்கள், ஆதலால், அந்தத்தில் முடியும் வகையை அறியுங்கால் பேதமற்றவைகளாகின்றன. நாம் நம்முடைய ஆன்மாவிற்கே அன்னியராகி வருகின்றோம்; கடவுளுக்கும் அன்னியராகப் பார்க்கின்றோம், ஆகையால் உலகமே நமக்கு அன்னியதாக முடிகின்றது. அன்னியன் என்றநினைவினால் வாழ்க்கையை நடத்தப் புகுந்தால் அழிவடைவது திண்ணம். அரசிற்கு மரசிற்குமாயினுஞ் சரி, ஆளிற்கு மாளிற்கு மாயினுஞ்



சரி, அன்னியனென்ற கொள்கைக்கு இடமில்லை. இடமிருந்து பயனுமில்லை.

இவ்விஷயங்களெல்லாம் வெளிப்படை. இதனை அறியாதாரும், நெருக்கிக் கேட்டால் ஒவ்வமறுப்பாரும், சாதாரண அறிவு இருப்பவர்களிலுங்கூட இருக்கமாட்டார். ஒன்றிற்கு முதவாத அரசியல்வாதங்களைப்பற்றிச் சுயஆட்சியென்றும் விடுதலையென்றும் அன்னியஆட்சியென்றும் வாதிப்பவரெல்லாம், ஆதலால் உள்ளத்தில் என்ன முடிவைவைத்துக்கொண்டு பேசுகின்றனர் என்று எண்ணுவது!

இன்னபடி, சுயஆட்சி சுதந்தரம் அடிமை ஏழ்மை முதலிய சொற்கள் நடைமுதல்பயிற்சியில் உள்ளக் கருத்தற்றனவாய்க் கேட்போர்க்கு அழுகையும் ஆவேசமும் மாறிமாறி எழக்கூடிய வகையில் வழங்கப்படுகின்றன. அழுகைக்கேனும் ஆவேசத்திற்கேனும் காரணமாயிருக்கின்ற சொற்கள் பண்புடைய சொற்களாகா. அமைதிக்குரிய மொழிகளும் செயல்களுமே அறிஞர் பாராட்டுபவைகளாம். சாந்தி சாந்தி சாந்தி என மும்முறை ஆசிகூறும், மெய்யுடைய மறைகளெல்லாம்.

நாமிந்நாள் அடிமையுற்றிருப்பது பண்டைக்கால பழக்கவழக்கங்களென்னும் கொடுமைக்கன்று; அன்னிய அரசாட்சிக்கு மன்று. 'தாழ்த்தப்பட்டவர்' என்ற இச் செயப்பாட்டு வினையாலணையும் பெயரால் குறிக்கப்படுபவரும் அடிமைகளல்லர் பெண்பாலார் ஆண்பாலார்க்கு அடிமைகளா யிருக்கின்றனரென்று சொன்னாலுஞ் சிரிப்புவரும். வாஸ்தவத்தில் பொதுஜனங்கள் அடிமையாயிருப்பது, உள்ளொன்று வைக்காமல் புறமொன்று பேசப்படுகின்ற இச் சொற்றொடர்களுக்கே என்று உணர்வதே நேராம். தன்னிஷ்டப்படி செய்யும் வகையற்றவனை யடிமையென்பர். தனக்கென்று ஒன்றுந் தானாக நினைக்கவும் முடியாதபடி இவ்விதச்சொற்களால் கட்டுப்பட்டிருத்தலினும் அடிமை வேறெங்குளது. இந்நிலை இவ்விந்தியாவிற்கு மாத்திரமே உரியதன்று. மேல்நாடுகளிலும் இதனையே காண்கின்றோம் சென்றவாரம் நாம் குறித்த பர்டராண்ட் ரஸ்ஸல் என்ற ஆங்கில அறிஞர் உரைகளை ஆராய்வோமாயின், "இச்சொற்றொடர்கள் ஆரவாரம் செய்யாமல் அவைகளின் வாயை அடைத்துஎன்றைக்குவெளியிற்றள்ளித் தாளிடுகின்றோமோ அன்றைக்குத்தான் நாம் உருப்படுவோம்" என்றகருத்தை மீண்டும்மீண்டும் அவர், தன்னுடைய நாட்டினர்க்கு எடுத்துரைப்பதைக் காண்பவராவோம். அவ்விஷயத்தை அடுத்தவாரத் தலைபங்கத்திற் காணலாம்.

(தொடரும்)

OFFICE OF THE RE... ...1929 MADRAS

# அப்பர்

## 4. பெரியபுராணத்தில் காணாத திருப்பதிகளில் அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பங்களும்

### 2. தஞ்சைஜில்லாத் திருப்பதிகளின் முற்பகுதி. சீர்காழியில் அப்பர் பாடியது முதல் திருப்பழையாறையில் சமணழித்த வரையில்.

425 பக்கத் தொடர்ச்சி

(21) திரு அரிசிற்கரைப் புத்தூர் இது மூவராலும் பாடல்பெற்ற ஸ்தலம். ஆயினும் மூவரில் ஒவ்வொருவருக்கும் திருப்பதிகம் ஒவ்வொன்றே திருமுறைகளில் இப்பதிக்கு உண்டு. சம்பந்தரும் * சுந்தரரும் † புகழ்த்துணைநாயனார் பத்தியை வியந்து பாடிய இப்பதியின் திருக்குறுந்தொகையை அப்பர் பாடியதொன்று அப்பக்திவிசேடத்தைத் திருநாவுக்கரசும் நினைந்தது போலும் ‡ காணப்படுகின்றது புத்தூர் என்னும் நாமம் பல புதுஊர்களுக்கு அக்காலத்தி லிடப்பட் டிருந்தமையால் அரிசிலாற்றங்கரையில் விளங்குமிப் புத்தூருக்கு திரு அரிசிற்கரைப் புத்தூரென நாமம் வழங்கிற்று.

திரு அரிசிற்கரைப் புத்தூருக்கு அப்பர் சென்றது வசந்தகாலம்போல் காணப்படுகின்றது *. அதன் பாங்கருள்ள அரிசிலாறு சுத்தமான சலப்பிரவாகமாயதும் ஸ்நானம் செய்பவர்கள் தேக பரிசுத்த மாத்திர

---

* நிலந்த ணீரோ டனல்கால் விசும்பி னீர்மையான்
சிலந்தி செங்கோற் சோழ னாகச் செய்தானூர்
அலந்த அடியான் அற்றைக் கன்றோர் காசெய்திப்
புலர்ந்த காலை மாலை போற்றும் புத்தூரே.

சம்பந்தர்-பண்-காந்தாரம் 7.

† அகத்தடி மைசெயு மந்தணன்றான்
அரிசிற்புனல் கொணர்ந்தாட்டுகின்றான்
மிகத்தளர் வெய்திக் குடத்தையுநும்
முடிமேல் விழுத்திட்டு நடுங்குதலும்
வகுத்தவ னுக்குநித் தற்படியும்
வருமென் றொருகாசினை நின்றநன்றிப்
புகழ்த்துணை கைபுகச் செய்துகந்தீர்
பொழிலார் திருப்புத்தூர் புனிதனீரே.

சுந்தரர்.

‡ முத்தா ரும்புனல் மொய்யரி சிற்கரைப்
புத்தூ ரண்ணடி போற்றியென் பாரக்கெல்லாம்
பொய்த்தா ரும்புல னைந்தொடு புல்கிய
மைத்தா ரும்வினை மாற்றவும் வல்லரே.

—திரு அரிசிற்கரைப்புத்தூர்—திருக்குறுந்தொகை 1.

* வேத னைமிகு வீணையின் மேவிய
கீத னைக்கிளருந்நறுங் கொன்றையம்
பேத னைப்புனல் சூழ்ந்தபுத் தூரனை
நாத னைநினைந் தென்மன னையுமே.

திரு அரிசிற்கரைப் புத்தூர்-திருக்குறுந்தொகை 1.

[இதனை

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே

என்பதுடன் ஒத்திட்டுப் பார்க்க.]

மன்றி மனச்சுத்தமும் அடைவாரென்பதும் அப்பர் திருவாக்கா லறிபலாம். ஆசுகவியாதலால், அப்பர் † 'காற்றினும் கடியவேகம்' என்னும் உபமானம் எடுத்துரைக்கும் சமயத்தில் காற்று வேகமாய் வீசிக்கொண்டிருந்திருப்பினுமிருக்கலாம். சுற்றமுள்ள பொருள்களைச் சிவரூபத்தில் காட்டும் அப்பர் திருக்குறுந்தொகைகளில் இப்பதிகம் ஒன்றும். ‡

(22) திருப்புறம்பயம்:—இதுவும் மூவரும் பாடிய ஸ்தலமே. மூவருடைய பதிகங்களில் ஒவ்வொன்று தேவாரத் திருமுறைகளிற் காணலாம். இவற்றில் அப்பர் பாடிய திருத்தாண்டகப் பாசுரங்கள் பத்து அமைந்த திருப்பதிகம் அகப்பொருள் துறைகளில் * பெரும்பாலும் உருவகமாய்ப் பாடப்பட்டிருக்கின்றமை காண்க. அங்ஙனம் பாடுவதில் $ பல திருப்பதிகளைச் செப்பிப் "புறம்பய நம்மூரென்று போயினார் பொடியேறு மேனியர்" என்பதையும் நோக்குக:—

(23) திருவிசயமங்கை:—இப்பதியில் அப்பர் பாடிய திருக்குறுந்தொகை யொன்றும், சம்பந்தர் பதிகமொன்றும் தேவாரத் திருமுறைகளிற் காணலாம். திருவிசயமங்கைத் திருக்குறுந்தொகைப் பத்து பாசுரங்களிலும் அப்பர் விசயமென்னும் மொழி,

† காற்றி னுங்கடி தாகி நடப்பதோர்
எற்றி னும்மிசைந் தேறுவ ரன்பொடு
நீற்றி னையணி வார்வினை வாய்த்தமைப்
போற்றி யென்பவர்க் கன்பர்புத் தூரரே.
ஷை 8.

‡ மூன்று முப்புரஞ் செற்றன ராயினும்
அன்ன மொப்பர் அலர்ந்தடைந் தார்க்கெலாம்
மின்னு மொப்பர் விரிசடை மேனிசெம்
பொன்னு மொப்பர் புத்தூரெம் புனிதரே.
ஷை 9.

* மூற்றொருவர் போல முழு நீறாடி
முளைத்திங்கள் சூடி முந்நூலும் பூண்டு
ஒற்றொருவர் போல வுறங்கு வேன்கை
யொளிவளையை யொன்றொன்று வெண்ணு கின்றார்
மற்றொருவ ரில்லைத் துணை யெனக்கு
மால்கொண்டாற் போல மயக்கு வேற்குப்
புற்றரவக் கச்சார்த்துப் பூதஞ் சூழப்
புறம்பயநம் மூரென்று போயி னாரே.
திருப்புறம்பயம்-திருத்தாண்டகம் 2.

$ (i) கொடிமாட நீள்தெருவு கூடல் கோட்டூர்
கொடுங்கோளூர் தண்வளவி கண்டி யூரும்
நடமாடு நன்மருகல் வைகி நாளும்
நலமாகு மொற்றியூ ரொற்றி யாகப்
படுமாலை வண்டறையும் பழனம் பாசூர்
பழையாறும் பாற்குளமுங் கைவிட் டிந்நாள்
பொடியேறு மேனியராய்ப் பூதஞ் சூழப்
புறம்பயநம் மூரென்று போயி னாரே. ஷை 1.

(ii) நில்லாதே பல்லூரும் பலிகள் வேண்டி
நிரைவளையார் பலிபெய்ய நிறையுங் கொண்டு
கொல்லேறுங் கொக்கரையுங் கொடுகொட் டியுங்
குடமூக்கி லங்கொழியக் குளிர்தண் பொய்கை
நல்லாளை நல்லூரே தவிரே னென்று
நரையூரிற் றூருந் தவிர்வார் போலப்
பொல்லாத வேடத்தர் பூதஞ் சூழப்
புறம்புயநம் மூரென்று போயி னாரே. ஷை 8.

சிவபராக்கிரமத்தில் எவ்வெவ் விஷயங்களுடன்கூட்டி மொழியலாமோ அவ்வவற்றினுடன் கூட்டிப் பாடப்பட்ட சொல்லணிகள் நிறைந்து விளங்கும்.

(24) திருஇன்னம்பர்:—இப்பதியில் திருநாவுக்கரசு நாயனார் பாடிய திருநேரிசைப்பதிகம்—1, திருக்குறுந்தொகை —1, திருவிருத்தம்—1, திருத்தாண்டகம் ஒன்று ஆகமொத்தம் 4 பதிகங்களுக்கு 40 பாசுரங்க ளிருக்கின்றன. இவற்றுடன் திருஞான சம்பந்தர் பாடிய பதிகம் ஒன்றும் திருமுறையிலிருக்கின்றது* அப்பதிகம் அவர் சமணரை அழித்து மதுரையினின்று மீண்ட பிறகு பாடியதென அநுமானிக்க இடங்கொடுக்கிறதால், இப்பதிகம் அப்பர் அவ்விடம் சென்ற காலத்தில் பாடியதன்றென எண்ணல் வேண்டும்.

மேற்கூறிய திருப்பதிகளில் திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம், கும்பகோணம்சென்றபோது அப்பர் பாடியிருக்கலாமென்றும், அதற்கு மேல்பாரிசமாயுள்ள திருக்கொட்டையூர், திருப்புறம்பயம், திரு இன்னம்பர், திருவிசயமங்கை இவை சற்றேறக்குறைய ஒருகாலத்தில் நாவுக்கரசர் பாடினாரென்றும், அதன் பின்னர்க் கிழக்கே மீண்டவர் திருச்சிவபுரம், திருக்கடுவாய்க்கரைப்புத்தூர், திரு அரிசிற்கரைப்புத்தூர் முதலியன திருக்கருகாவூர் வழி செல்லுங்காலை அவர் சென்றிருக்கலா மென்றும் நாம் அனுமானிக்கலாகும்.

(25) இக்காலத்தில் திரு அவளிவணல்லூரையும் ¶ அப்பர் தரிசித்தார்போல் காண்கின்றது. இப்பதியில் அப்பர் பாடிய திருநேரிசைப்பதிகம் ஒன்றே திருமுறையிற் காணலாம். இப்பதிகத்திலுள்ள பத்து பாசுரங்களும்இராவணன் கைலையில்சிதைந்த தன்மையையும் பின்னர் அருள்பெற்றதையும் விளக்கும் †. இத்தலத்தில் சம்பந்தர் பதிகமும் ஒன்றுண்டு.

* ஏரமர் பொழிலணி இன்னம்பர் மேவிய
தேரமண் சிதைவுசெய் தீரே
தேரமண் சிதைவுசெய் தீருமைச் சேர்பவர்
ஆர்துய ரருவினை யிலரே.
சம்பந்தர்-திருமுக்கால், பண்—சாதாரி 10.

[குறிப்பு-இங்குச் சிதைவு செய்தீர் என்பது இறந்தகாலத்தையே குறிக்கின்றதன்றிக், காலவழு வமைதியாய் எதிர்காலவிடயம் என்று சொல்ல ஆதாரவில்லை. ஆகையால் இப்பதிகம் சம்பந்தர் சமணரை அழித்து மீண்டபிறகே பாடியதென்று எண்ணலாகும்.]

¶ இதற்குச் சமீபமான ரயில்வேஸ்டேஷன் பாபவிநாசம் (ஸ்டேஷனுக்கு வடகிழக்கே ஒரு மைலில் திருப்பாலைத்துறை). ஸ்டேஷனுக்குத்தெற்கே சாலியமங்கலம் கற்சாலையில் 4 மைலில் திருக்கருகாவூ ரிருக்கின்றது. தெற்கே 4 மைலில் சாலியமங்கலம் ஸ்டேஷன் மார்க்கத்தினின்றும் வரக்கூடிய களஞ்சேரிப்பாலம் விண்ணாறு வடகரை மார்க்கத்தில் கிழக்கே 4 மைலில் திரு அவளிவணல்லூர் இருக்கின்றது.

†ஊக்கினான் மலையையோடி யுணர்விலா வரக்கன்றன்னைத்
தாக்கினான் விரலினாலே தலைபத்தும் தகரவூன்றி
நோக்கினா னஞ்சத்தன்னை நோன்பிற வூன்றுசொல்லி
ஆக்கினா ரமுதமாக வவளிவ ணல்லூ ராரே.



# ஏமாங்கதத் திளவரசன்

[By Kind Permission of Messrs. B. G. PAUL & Co., Madras.]

## 5. கோமகன் கனவு.

428 பக்கத் தொடர்ச்சி.

பிணங்கிடக்கும் மனையிலும், மணம்நடக்கும் மனையிலும் வேறுபாடின்றிக் காய்கின்ற ஆதித்தன் என்றைக்கும் போலவே அன்றைக்குந் தோன்றினான். படைஞரெல்லாம் காலைக் கடன்முடித்து உணவு அருந்திப் போர்க்கோலம் கொண்டனர். வாசவன்தான் அவர்நிலைக்கு இரங்கினான்; அத்தறுகண் காளையர்க்கோ முன்னாள் போரிலே மாளாததே குறை. வேந்தனுக்காக இன்னும் எமது உயிரை அர்ப்பணம்செய்யும் பாக்கியம் பெற்றிலோம் எனப் பரிவுகூர்ந்தனர் சிலர். சிலர் வீரசுவர்க்கம் வைகுதற்குரிய புண்ணியம் புரிந்திலோம் என ஏக்கமுற்றனர். எனினும், அக்களத்தில் இருபுறத்திலும் அன்று எழுந்த வீரர்தம்முள் தத்தமக்கு ஏற்ற பகைவரே வாய்த்தனர் எனும் மகிழ்ச்சியே முதன்மையாய் இருந்தது.

வாசவன் இதுகாறும் வெளிவந்து தனதணியைக் கண்ணுறாமல் தாழ்ந்ததால் அவன் படையிலுள்ள சில வீரர் அந்நாள் செய்யவேண்டிய போர்ப்பிரயத்தனம் எதுவென அவனிடம் தெரிந்துபோக வந்தனர். வந்து, "தலைவ, இன்றைத்தினம் எமக்கு எக்கருமம் விதிக்கின்றாய் ?" என்று வேண்ட, வாசவன், "போம், நேற்று மாண்டவர்க்கு அழுதலே இன்று நுங்கரும மாகும், போம்!" என வெறுப்புடன் பகர்ந்தனன். ஒருவரையொருவர் அதிசயம் தோன்ற நோக்கினர். இதனிடையில் பஞ்சரவல்லியும் தனது பாகன் கோலத்தைத் திருத்தி யமைத்துக்கொண்டு வர, வாசவன் அவளைப்பார்த்து, "வலவ, நம்தேரை விரைவினில் கொணர்வாய். நாம் இப்பொழுதே இராசமாபுரம் போகின்றோம். மன்னவர் குலத்தில் பிறந்தபிறவி எனக்குப் போதும்" என்றனன். படைவீரர் "ஆயின், ஐய, நாங்கள் என் செய்வது, பணித்தருள்" என்றனர். "இரத்த வெறிகொண்ட பேய்காள். நீங்கள் செய்யக் கற்றுளதும் ஒன்றே. கையினகப்பட்டவர்களை யெல்லாம் கொன்றிடுங்கள். கொன்றபின், கொல்வதற்கு எவரும் இனி இல்லையெனக் குறையுறுவண்ணம் நும்மையே கொன்றுகொள்ளுங்கள்," என அவர்க்கு முகங்கொடாது எதிர் இயம்பினன் வாசவன். இவ்வுரை கேட்கச் சிலர் சினம்கொண்டனர். தாம் உற்ற வியப்பினிற்குக் கரை காணாராய்ச் சிலர் நின்றனர். இருவர் மூவராய்ப் பிறவீரர் வந்தடைய அங்குக் குழுமியவர் தொகை அதிகரித்தது. வந்தவர் இருந்தவரை யாது யாது, என வினவுபவராயினர். பாகனாய்ப்போந்த பஞ்சரவல்லி தேரைப் பூட்டிக்கொணராதுமல் இன்னும் அவ்விடமே தாழ்வதுகண்டு கோமகன், "நின்னை வேண்டிக்கொள்கின்றேன். என்பால் அன்புடையையாயின் இரதந்தனைச் செலுத்திவா. இல்லையேல் கால்நடை கொள்வேன்." என உரைக்குமளவில் ஓர் வீரன் எதிர்வந்து, "ஐய, எம்மையேன் இவ்வாறு பழிக்கின்றாய்! எங்கள் வீரத்திலேனும் போர்வன்மையிலேனும் நின்பால் எமக்குள ஆர்வத்திலேனும் ஏதேனும் நீ குறைதான் கண்டதுண்டோ! நாள் ஒன்றில் நாம் அக்கடாரப்படையை அறவே வென்றிடாத சிற்றமோ இது! ஆயின், எம் பெரும, முறையும் செவ்வியும் தக்கபடி உணர்ந்து நீ எங்களைப் போர்தனில் நடத்தவில்லையே. நாங்கள் என் செய்வோம்! கொடியனாயினும் அப்புஜங்கன் எங்களுக்குத் தலைமை பூண்டு அணிசெலுத்தி யிருப்பானேல், சரபசூரனும் அவன் படையும் எங் கைவாளின் ஒருமுகூர்த்த விளையாட்டிற்கும் பற்றுவரோ!" என்று சலிப்புடன் செப்பினான்.

வந்த வீரருள் ஒருவன் இன்னவாறு ஏனாதி மோதிரம் தரித்த இளவரசனை இடித்துரைத்திருந்தபோது மற்றையவர், ஆம் ஆம், எனத் தலையசைத்துத் தம் கருத்தும் அன்னதே எனத் தெரிவித்தனர். வாசவன் அவர்களுக்கு ஏற்றவிடை ஏதோ இயம்பத் தொடங்கினன். ஆனால், பஞ்சரவல்லி இடைதடுத்து, "ஐயன்மீர், எம்தலைவன் நோய்நிலைகொண்டு மெய்யும் ஆவியும் வாட்டமுற் றிருக்கக் காண்கிலீரோ ? இரவினில் நித்திரை சிறிதும் பெற்றிலன். அன்னான் செய்கையும் சொல்லும் சிந்தையொடு பயிலாது நிகழ்கின்றன. எனினும் தலைவன் உரை மறுக்காது ஒழுகலே வீரர் கடன்," என மொழிந்து தேரைப் பூட்டிவரப் போயினள். அச்சமயம் சிலர் களம்கடந்து தம்மிடம் நோக்கிவரக் கண்டனர். வருமவர் யாவரெனும் சந்தேகமும் சிறிது நேரத்தில் அகன்றது. ஒளிதிகழ் ஓடையணிந்து மின்னிவரும் மேகமெனப் போந்த வேழமொன்றினில் கடாரப்படை நடத்தும் சரபசூரனை நண்ணினான். அக்குஞ்சரத்தின் கழுத்தில் காவடித்தண்டொன்று வைக்கப்பெற் றிருந்தது. அந்தக் காவடியின் இருபுறத்திலும் தொங்கிய இரண்டு உறிகளில் ஒவ்வொன்றிலும் மனிதன் ஒருவன் பாதி உரு புதைய அமர்ந்திருந்தனன். படைஞர் பதின்மர் இக்கரியைத் தொடர்ந்து நடந்தனர். வாசவனைச் சூழ்ந்திருந்த குழுவின்புறத்தே இந்தயானை சேர்ந்தவுடன், அவர் வழிவிலகிச் சரபசூரன், தம் தலைவனுக்கு அருகே அடையுமாறு விடுதலும், வேழம்விட்டு இறங்கிய சரபசூரன் அரசிளங்குமரனைக் கைதொழுது, "வாழ்க நீ மன்னவன் புதல்வா, விடையெனக்குத் தந்திடுவாய். இக்கடும்போர் வேண்டுவது இனி யொழிந்தேன்," என்று வாசவன் களிசிறக்கச் சாற்றினான். வாசவனும் கூப்பிய அவன் கரங்களைப் பரிவுடன் பற்றி, "நண்ப, எனக்கும் கருத்திதுவே. நமமிருவர் உள்ளமும் இவ்விதம் சேர்ந்ததால் பெரிதும் உவகை எய்தினேன்! ஐய, சுகமே ஏகுக. நும்மரசற்கு எமதன்பைச் சொல். இத்தனையளவு உயிர்களுக்கு இறுதி செய்திலோமாயின், காரணமும் கருத்துமின்றி நடைபெற்ற இச்சமர் சிரிப்பதற்கே அமைந்ததாகும். இருப்பினும், நேற்று நான் நின்பால் சந்துபடப் பேசியபோது நீ ஒவ்வாதது ஏன்? உயிர்ச்சேதம் நேர்ந்திரா தன்றோ!" என்று கேட்டான்.

"இப்பொழுது யான் அறிந்த வெல்லாம் அப்பொழுது அறிந்த தில்லையே!" எனச் சரபசூரன் கூறினனாய், உறியுள் ஊசலாடிய இருவரையும் வாசவற்குக் காட்டிப், "புரவலன் ஆவோனும் பாவலன் ஆயி

ுய இவ்விரு தூமகேதுக்களும் தோன்றி செய்யத் தலைப்பட்டன. கேடு நினைத்தவர் . ஒருவனுக்குக் கண்போயிற்று, ஒருவனுக் போயிற்று. இவர்களுக்குப் பேழ்வாய் தும் நரகத்தின் சுவையை இங்குச் சிறிது ர்களைப் போக்குவதற்கு நின்பால் சேர்க் என்று கூறி அவர்களை உறியினின்றும் று தனதாட்களுக்கு ஏவினன். பஞ்சர தரைக் கொணர்ந்து நிறுத்திவிட்டு வாச ல் சேர்ந்தாள். கண்ணிழந்து தீயினால் புஜங்கனது முகத்தின்சாயல் முற்றிலும் , அங்கிருந்தோர் எவரும் அவனைத் தெரி ளவில்லை. எனினும் மேல்நாள் அரசனு மைந்தவன் இவன் என்னச் சரபசூரன் றிப்பினால் வாசவனுக்கு மாத்திரம் சிறிது சந்தேகம் உண்டாயிற்று. பஞ்சரவல்லி இச்சொல் கேட்டிலள், ஆயினும் புஜங்கனைக் கண்ட அளவிலே அவளுள்ளம் படபடத்தது. வாசவன் முகத்தை நோக்கினாள். வாசவன் சரபசூரனை நோக்கினான். சரபசூரன் புஜங்கனையும் சாபாலனையும் நோக்கினான். அவ்விருவருள் சாபாலன் புஜங்கனை நோக்கினான். புஜங்கனது ஒற்றைக்கண் நோக்கமோ வெறியுற்று வெற்றிடம் புரண்டது. அப்பொழுது ஏமாங்கத வீரருள் ஒருவன், "ஐய, குருடும் நொண்டியும் எம் மரசனுக்கு நீ காணிக்கையாய்க் கொணர்ந்தாய்போ லும்!" என்று சரபசூரனைப் பரிகசிக்க, அவனும் "வீரர்காள், இது நகைத்தற்கு அமைந்த செய்தி யன்று. கண்ணிழந்த இக்காதகன் யாவன் என உற்று நோக்குமின்" என்றியம்பிப் புஜங்கனைப் பற்றி எதிரில் நிறுத்தினான்.

# மாறன் பாப் பாவினம்.

[ 435 பக்கத் தொடர்ச்சி ]

அம்போதரங்க வோருபோகு.

*தரவு.*

ல்கு துறைத்திருப்பாற்
டனடுவண் வரியரவி
ல்கு மமளியின்மே
றிதுயில்கொள் வுழிமதமா
களர்கூர்ந் தழைத்தகுரற்
லர்மடந்தை முகுளமுலைக்
ங்களபத் தினிலழுந்திக்
தழைதிருமார் பையுநெகிழ்த்தும்
ல்வன் னிலத்துறைப்பப்
பொலந்துகில்சுற் றவிழவிரு
றுந் துணர்க்குஞ்சி
வற்புரளத் துணைத்தோளாற்
கலு ழனைக்கொடுதாய்த்
ாயிடங்கர் முரண்முருக்கித்
மலத் தடம்புடைசூழ்
தன்னரங்கத் தமர்ந்துளாய்

இது, எட்டடித்தரவு.

ஆங்கும் (தனிச்சொல்)

*கொச்சகம்.*

போன் றணுக்கடொறும் வீற்றிருத்தல்
ஞ் ஞானந் தரிப்ப வுலகனைத்து
ர் மாயை யினைத்தெருளா தேயிறப்பை
நீயென்ப தெவன்சொல்.

கோதமனுற்கற்படிவங் கைக்கொண்டாள்
கியதைத் தாட்டா மரைதருதாள்
ந் செய்ததுமூர் போன்ம்.

கையாண் முறுவலிப்பப் பூந்தா
தனை யிளவரச தாக்கிப்
ளித்ததுரூர் போன்ம்.

அஃதான்று, (தனிச்சொல்)

நத்தி தன்னை யளித்தியென வென்னுற்
ற் கென்னத் தணந்தவனை நோக்கப்
புணர்ந்தவரே யல்லாதப் புண்ணியன் காணுத
துணர்திலரோ மூட முணர்ந்தோர்.

காத்தலா லுந்திக் கமலமல ரண்டமெலாம்
பூத்த திறமறியார் போன்ம்.

இவை யைந்துங் கொச்சகம்.

*அராகம்.*

துறவற முதலிய துரிசற வருளின
னறமலி புதல்வரை யருளிய தறிகிலா.
திவமுறு சிறுவர்க ளறுவரோ டிருவரை
யவன்வயி னடைவினி லருளிய தறிகிலா.

எட்டும் சிற்றெண்

1. தாதையாதலும்
2. பேதையாதலும்
3. பெரியனாதலும்
4. கரியனாதலும்
5. புதல்வனாதலும்
6. அறிவனாதலும்
7. சிறியனாதலும்
8. செம்மையாதலும்

உணர்கிலா, (தனிச்சொல்)

*சுரிதகம்.*

கன்றொடு சிறுவர் கடைகயி றணிகுணில்
கொன்றையங் தீங்குழல் கொடுமல ரயனெழு
மவ்வுழி யவையவை யவரவர் தெருளுற
வெவ்வுரு வமுமா னினதுரு வழியா
திருப்பவும் வியாத்தியெய் தியதுணர்ந் திலரா
லற்புதன் மாயை யழிவிலாக் கருணைய
சிற்குண நினைத்தெருட் டினரே
யெற்கிறை யெனமனன் மதித்ததிப் போதே.

இது, எட்டடித்தாய் நேரிசையாசிரியத்தா னிற்ற சுரிதகம். இது, அம்போதரங்க வொருபோகு. என்னை? "அம் போதரங்க மறுபதிற் றடித்தே, செம்பால் வாரஞ் சிறுமைக் கெல்லை" எனவும், "எருத்தே கொச்சக மராகஞ் சிற்றெண் ணடக்கியல் வாரமோ டந்நிலைக் குரித்தே" என்பதனானு முணர்க. இங்ஙனங்கூறப்பட்ட வம்போதரங்கவொருபோகு தன் னுறுப்பெல்லாங் கூட்டி அறுபதிற் றடித்தாகவும், அதன் செம்பால் முப்பதடித்தாகவும், அதன்வாரம் பதி னைந்தடித்தாகவும் சிற்றெல்லை பெறுமென்றவாறு. எனவே, இது, தலையள வம்போதரங்க வொருபோகும், இடையள



வம்போதரங்க வொருபோகுங் கடையள வமபோதரங்க வொருபோகுஞ் சிற்றெல்லை கூறியவாறாயிற்று. அவற்றிற் குப் பேரெல்லை கூறுமாறென்னையெனின், அறுபதிற்றடித் தெனத் தலையளவிற்கு வேறு கூறியவழி யவ்வளவைப்பற்றி யதன் செம்பாலும், வாரமுமெனப், பாகஞ்செய்து வந்தா னுதலாற் கடையளவிற்குச் சிற்றெல்லை பதினைந் தாயவழி பேரெல்லை யிரட்டினூற் றிருபதின்காறு முயருமெனவுங் கொள்ளவைத்தா னென்பதாம். ஆதலாலிது, நாற்பத்து நாலடியால் வந்தமையால், இது, இடையெல்லை யிடையள வம்போதரங்க வொருபோகு. ஒழிந்தனவு மிவ்வாறேவரும். இவையெல்லா மிக்காலத்து வீழ்ந்தன போலும். திணை- பாடாண். துறை-கடவுள் வாழ்த்து. 14

ஒத்தாழிசைக் கலிப்பா வகை

முற்றிற்று.

---

வெண்கலிப்பா.

பொன்னெடுங்குன் றெனச்செறிந்து
புடைத்தெழுமென் புளகமுலை
மின்னெனலாய் நுணுகிடையவ்
வேய்புரையுந் தடமென்றோட்
குளிர்மதிபோன் றொளிவதனக்
கோமளப்பூங் கொம்பன்னா
டளிர்புரைமெல் லடிச்சுவடுந்
தளர்ந்தனவெய் யோனென்றாற்
குடதிசைவான் கதிர்சுருக்கிக்
கொடித்தேரி னெடுமறைந்தா
னடல்புனல்வே டுவரென்றா
லற்றம்பார்த் தாறலைப்பர்
பொன்புனைபூண் மணிமார்பிற்
புரவலவின் றிருவீடு
நன்குலத்தெம் மில்வைகி
நறுந்தேன்செந் தினையருந்தி
மரையதளிற் றுயிலமர்ந்து
வைகறைவாய்த் துயிலெழுந்து
விரைகமழ்தார் மகிழ்மாறன்
மெய்த்தமிழ்ச்சொற் குருகூரின்
முதிர்திரைப்பா லாழியின்வான்
முகடுரிஞ்சு முதையகிரி
கதிர்வருமுன் சேர்தல் கடன்.

இது, வெண்கலிப்பா. என்னை? "வெண்டளை தன் றளை யென்றிரு தன்மையின், வெண்பா வியலது வெண் கலியாகும்." என்றார் காக்கைப்பாடினியார். இதனுள்ளும் வெண்டளைதட்டும் துள்ளலோசைத்தாகியு மீற்றடி முச் சீரான் வந்தவாறு காண்க. இது, பகுதி-உடன் போக்கு. துறை-நெறி விலக்கல். அலங்காரம்-அவயவ மவ்யவி யிரண் டினையு முவமைப் படுத்தலான் முற்றுவமை. 15

---

கலி வெண்பா.

படுதிரைப்பா லாழி பயந்தவெண் டிங்க
ணடுவண தாகிய நாண்மலர் நீல
மினையென வாண்முகத் தெய்துந் துணைவிழி
நன்னீ ரருவி நறுந்தே னருவியுடன்
மன்னீர்மை வாய்தனவா மாழை வரைபுரையும்
வெண்ணித் திலத்தாம மேதகுமா மணிவடத்திற்
பண்ணமைத் தோங்கிய பைம்பூட் புணர்முலை
கூற்றுரு நேர்ந்தோர் குறிப்போ டயிருண்
மாற்றுருக் கூர்தன் மருள்வண ரைம்பா
லெம்போன் றடிப்பணி யீறின் றியற்று
துமதா ருயிர்கொண் டொருவுமின் சேய்த்தென்
றருடக வாண்டாண் டணித்துறு மைந்தர்க்
குருபமை நூபுர மோவா தொலிக்குந்
தளிர்புரை மெல்லடித் தையல் பொருட்டா
விளம்பிறை வெங்கோட் டிரும்பினர் வான்கை
வளங்கெழு தீவிழி வாரண வேட்டைக்குச்
சிங்கங் குழூஉச்செய் சீறா ரதரிடை
யிங்கியாந் துன்புற வீண்டிருள் யாமம்
பனிமகிழ் மாறன் பராங்குசன் வெற்பிற்
றனிவரல் வேலோய் தவிர்.

இது, கலிவெண்பா. என்னை? "ஒரு பொருணுதலிய வெள்ளடி யியலாற், றிரிவின்றி நடப்பது கலிவெண் பாட்டே" என்றார் தொல்காப்பியனார் என்பதனானுணர்க. இதனுள், வெண்டளைதட்டு வெள்ளோசை தழுவி வந்த வாறு காண்க. பகுதி-இரவுக்குறி. துறை-இரவச்சங்கூறி வரவு விலக்கல். அலங்காரம்-பெயரொடுபெயர் நிரனிறை யுவமை, இல்பொரு ளுவமையு முள. 16

---

வெண்கலிப்பா.

குருகையின் மகிழ்மாறன் குலகிரி தனில்வைகுந்
திருமுக மதிபோலுஞ் சிறுபிறை நுதன்மன்னோ
விருகயன் மதர்நோக்க மிலவின திதழ்செவ்வாய்
பருமணி நிரையென்னப் பழுதற மிளிர்மூரல்
வருமிள முலைமாதே மதகளி றெனலாகு
மொருபிடி யிடையாகு மொருபிடி நடைசாலு
முருவளர் பணைமென்றோ ளுயர்வுறு மரவல்குல்
கருமுகில் குழன்மொழி கரும்பு.

இது, ஆசிரியத் தளையானும், தன்றளையானு வந்த வெண் கலிப்பா. பகுதி—சேட்படை. துறை— அவயவங்கூறல். 17

கலிவெண்பாட்டு

முற்றிற்று.

---

அகத்தியமுனிவர் அருளிச்செய்த ஆறெழுத்தந்தாதி:— முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற்குறித்தாய் ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல், பென்ஷன் டாக்டர் V. S. அருணசலம்பிள்ளை யவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை 12 அணு.

வி. பி. சார்ஜ் வேறு. கலாநிலயம், வேப்பேரி, சென்னை.

# வில்லி பாரத விளக்கம்

## ஆதி பருவம்

காண்டவ தகனச் சருக்கம்.

397 பக்கத் தொடர்ச்சி

சுபத்திரையைக் கவர்ந்துசென்ற கள்வன்தன்னைப் பலராமரும் பல வீரரும் தொடர்ந்து சென்று அமர் தொடுத்தார்கள். இயற்கையிலேயே விற்றொழிலிற் சிறந்த வீரன், தன் வில்வன்மையைத் தனது காதற் கிழத்திக்குக்காட்டநேரிட்ட வமயத்தில் வாளாவிருப்பனோ? சார்ங்க முதைத்த சரமழை போல் அம்புகளெய்து சமர்முடுக்கி அனைவரையும் புறங்கண்டு, தேன்மொழி நங்கையும் தேர் செலுத்தத் தன்னூர்ப்புறம் வந்தடைந்தான். வெற்றி வீரன்தன் பின்சென்று செங்கண்மாலும் பலரும் இனியமொழி பலபகன்று மணவினை முடித்தார்கள். சின்னாட் சென்றபின் நல்லோரையில் அவளிடம் அபிமன்னு பிறந்தான். திரௌபதியும்ஐந்துகுழவிகளை யீன்றெடுத்தாள். துருபதனும் பாண்டவர்களும் ஒற்றுமையோடு தெவ்வரஞ்ச வாழ்ந்துவந்தார்கள். அச்சமயம், ஒருகால், மாரனுக்கு நட்பாய வசந்தகாலம் வந்துதோன்றியது. இச்சருக்கத்தின் தொடக்கத்தில் வில்லியும், அவர் முதன்மைப்பட்ட கவிக்குழுவிற் சேர்ந்தவர் என்பதைக்காட்டி, அவ்விளவேனிற் பருவத்தைப் பலபடப் புனைந்துரைக்கின்றார்.

நனியாட லனற்கடவுள் யமனிருதி
　　நண்ணுதிசை நாட்க டோறு
முனியாம னடந்திளைத்து முன்னையினும்
　　பரிதாப மிகுந்த தென்று
தனியாழித் தனிநெடுந்தேர்த் தனிப்பச்சை
　　நிறப்பரியைச் சயில ராசன்
பனியாலவ் விடாய்தணிப்பான் பனிப்பகைவன்
　　பனிசெய்வோன் பக்கஞ் சேர்ந்தான்.

[மிகவும்வெற்றியுடைய அக்கினிக்கடவுளும்,கூற்றுவனும் நிருதியும் பொருந்திய திக்குகள்தோறும், சலிக்காமல் நடந்து சென்று இளைத்து முன்னைவிடத் தனது குதிரைக்குத் தாகம் அதிகரித்ததென்று, ஒற்றைச் சக்கரமும், சிறந்த பெருந்தேரும், ஒப்பற்ற பச்சை நிறமுமுடைய பரிமாவுக்கு மலையாசனான இமவான் பனியினாலே, அவ்வெப்பத்தைத் தணிக்கவேண்டிப் பனிக்குப் பகைவனான சூரியன், பனியையுண்டுபண்ணுபவனான அம்மலையின் பக்கம் போய்ச் சேர்ந்தான்]

அக்கினி, இயமன், நிருதி இம்மூவரும் எட்டு திக்குப்பாலகர்களைச் சேர்ந்தவர்கள். இவர்களுடைய திசைகள் முறையே தென்கிழக்கு, தெற்கு, தென்மேற் கென்பார்கள். இமயமலை வடக்கிலிருப்பதால், தென்றிசையிலேயே உலவிக்கொண்டிருந்த சூரியன், இளவேனிற்பருவ முதலில் தக்ஷிணாயனத்தை விட்டு உத்தராயணம் வந்து சேர்ந்தான் என்பது இச்செய்யுளின் கருத்து. இச்செய்தியை, அழகுற அதற்கு ஓர் காரணத்தைக் காட்டித் தற்குறிப்பேற்ற வணியாய் அலங்கரித்துக் கூறினார் வில்லி. அது நமது மனதிற்கு ஒரு விதத்தில் இன்பத்தை யூட்டுகின்றது. செய்யுளின் யாப்பும் நான்கு காய்ச்சீரும் இரண்டு மாச்சீரும் தொடர்ந்துவரப் பெற்ற அறுசீர் ஆசிரிய விருத்தமாய், ஓதுவார்க்கு ஒருவித கிளர்ச்சியைத் தருகின்றது. வில்லி சிறந்த வருணனைகளையும், பல வெண்ணங்களை வெளிப்படுத்தும் அணிகளையும் கொண்ட செய்யுள்களையெல்லாம் அறுசீரும் அதற்குமேற்பட்ட சீர்களுங்கொண்ட ஆசிரிய விருத்தத்தாலேயே செய்திருக்கின்றார். கம்பர் இத்தகைய யாப்பை, மனக்கலக்கத்தை வெளிப்படுத்தும் சமயத்திலும், சம்பாஷணையில் ஆழ்ந்த கருத்துக்களை வெளிப்படுத்தும் இடங்களிலும் உபயோகிக்கின்றார்.

மேற்கூறியபடி இச்செய்யுள் சிறந்ததென்று கொள்ளத் தகுந்ததேனும் சற்றே உற்று நோக்கினால் அது உண்மைக்கு விரோதமாய் இருப்பதைக் காணலாம்.

நமது இந்தியர்முறைப்படி பருவகாலங்கள் ஆறு. அவை கார்காலம், குளிர்காற்று வீசும்காலம், முன்பனி பின்பனிக் காலங்கள், இளவேனில், முதிர்வேனிற் காலங்களாகும். இளவேனிற் காலத்திற்கு முற்பட்டகாலம் பின்பனிக்காலம் ஆனபடியால், அக்காலத்தில் புரவிக்கு அவ்வளவு தாபம் ஏற்படக் காரணம் இல்லை. ஆயினும், அக்கினியும் இயமனும் வருத்தத்தையே யுண்டுபண்ணுகிறவர்களாதலால், அக்னியினால் விளைந்தகொடுமை, இயமனால் அதிகரிக்கப்பட்டதென்று கொள்ளவேண்டும்.

இளவேனிற் காலத்திற்குரிய மாதங்கள் சித்திரையும் வைகாசியும். பின்பனிக் காலத்திற்குரிய மாதங்கள் மாசியும் பங்குனியும். முன்பனிக் காலத்திற்குரிய மாதங்கள் மார்கழியும் தையும். ஆகவே, சூரியன் உத்தராயணம் சென்றது, வில்லி கவியின்படி பங்குனி இறுதியினும் சித்திரைக்கு முன்னும் ஆகவேண்டும். ஆனால் இயற்கையில் தை மாதத்திலேயே உத்தராயணம் தொடங்கி விடுகிறபடியால் அவ்விதத்திலும் சற்றே இதுஉண்மைக்கு விரோதமாயுள்ளது. காலம் கலியாயின் அக்காலத்திற்கேற்ப பருவமும் முறைபிறழ்ந்து வந்ததென்று சொல்வதற் கிடங்கொடுத்திருக்கும். ஆனால் இது நடந்தது கலியுகத்திற்கு முற்பட்டதாதலால் அவ்வகையில் சமாதானம் சொல்வதற்கு மிடமில்லை. உத்தராயணம் முதற்கொண்டே குளிர் நீங்கி வேனிற்காலம் ஆரம்பமாதலால் அதை அவ்வாறு வருணித்திருக்கிறாரென்று கொள்ளவேண்டும். அனற்கடவுளுக்கு எங்குச்சென்றாலும் வேனிற்காலத்தில் வெற்றியேயாதலால் ஆடல் என்னும் அடைமொழி கொடுக்கப்பட்டது. ஆங்கில நூற்களின்படி சூரியன் நின்ற விடத்திலேயே நிற்கின்றானெனினும், காட்சிக்கு அவன் கிழக்கு நீங்கி மேற்கைநோக்கிச் செல்வதுபோற் றோற்றுவதாலும், அச்சமயம் கிழக்கிலிருந்து தெற்குநோக்கியும், தெற்கிலிருந்து மேற்குநோக்கியும், செல்லாவிடினும் பொதுவில் கிழக்கு தெற்கு மேற்காகிய திக்குகளைக் கடந்தே செல்வதால் அத்திசைகளில் நாடோறும் புரவிநடந்து சென்றதென்று கூறப்பட்டது. தனியாழியென்னுமிடத்து ஒரே உருளை யெனவும், தனிப்பச்சையென்னுமிடத்து ஒப்பற்ற பச்சை நிறமெனவும் பொருள் கொள்ளுதல் ஏற்புடையது.



பனிப்பகைவன், பனிசெய்வோன் பக்கம் அவனுதவியை நாடிச்செல்லுதல் ஓர் விந்தையே. மேலும், பனிப்பகைவன் பனியைத் தேடி அதைக் கடியாமல், அதன் சேர்க்கையை விரும்பிச்செல்லுதலும், பனியும் சூரியனைக்கண்டு மறையாமல் தன்னுருவத்தோடே சென்று தன்னியற்கைக் குளிரினால் சூரியனிடமிருக்கும் குதிரையின் வெப்பத்தைத் தணித்தலும் விந்தையிலும் விந்தையே! கடையடியில் மோனையோடு முரண்தொடைகளும் அமைந்திருத்தல் விநோதமாயிருக்கின்றது? பொதுவுறநோக்கில், பின்வரும் வருணனைகளுக்கு ஒரு சிறந்த தோற்றுவாயாகி இச்செய்யுள் அமைந்திருக்கிறதென்றே கொள்ளலாம்.

கலக்கமுற விளவேனிற் கலகமெழுந்
　　திடும்பசுந்தண் காவு தோறுஞ்
சிலைக்கணிநாண் முறுக்குவபோற் றென்றலின்பின்
　　சுழலளிகள் சேர வோட
வுலைக்கனலிற் கருங்கொல்லன் சிறுகுறட்டாற்
　　றகடுபுரிந் தொதுக்கி மாரன்
கொலைக்கணைகள் சமைப்பனபோற் குயிலலகாற்
　　பல்லவங்கள் கோது மாலோ.

[மனக்கலக்க மடைய இளவேனிற்காலத்தில் தொடங்கும் மதனலீலைப் போர்கள் உண்டாகும் பசுமையான குளிர்ந்த சோலைகளிலெல்லாம் மன்மதனுடைய வில்லிற்கு அழகிய கயிற்றைத் திரிப்பதுபோலத் தென்றற்காற்றின் பின்னால் சுழன்றோடும் தேனீக்கள் அடர்ந்து ஓட, உலைக்களத்து நெருப்பில் கருங்கொல்லன் சிறிய குறடுகொண்டு தகடுதட்டிச் சுருட்டி உயிர்கொள்ளும் அம்புகளை மனமதனுக்குச் செய்து தருவதுபோலக் குயிலானது தன் மூக்கினால் தளிர்களைக் கொய்யும்]

இளவேனிற் காலத்தில் காலையில் சூரிய வெப்பம் அதிகமாயிருப்பினும் இரவு குளிர்ந்தும் தண்ணென்ற தென்றல் வீசிக்கொண்டு மிருக்குமாதலால் அக்காலம், காதலர்க்கு உரிய காலமென இந்திய நாட்டில் பாராட்டப்பட்டு வந்தது. வடமொழியில் காளிதாசரால் இயற்றப்பட்ட 'ருது சம்ஹாரம்' என்கின்ற நூலும் இவ்வேனிற்காலத்தையே சிறப்பித்துச் சொல்வதோடு அக்காலத்தில் வெப்பத்தைத் தணிக்க மகளிர் செய்துகொண்டிருந்த பற்பல சூழ்ச்சிகளையும், காலத்தைப் போக்க அவர் செய்த ஆடல்பாடல்களையும் எடுத்துச்சொல்கின்றது. அதேபோல் வில்லியும் அக்காலத்தை வருணிக்கத்தொடங்கிய இந்தச் சருக்கத்தில் தன்மனோபாவத்தை ஏற்றமொழிகளால் நயம்பட உரைத்திருக்கிறார்.

மேற்சொன்னவைகளால் முதலடியின் பொருத்தம் நன்குவிளங்கும். தென்றற்காற்று வீச, அத்தென்றல் கந்தமுந்திய காவினிலுள்ள நாண்மலரின் நறுமணத்தைக் கொள்ளைகொண்டு வருதலால், அம்மணத்தை நுகர்ந்து அதன்பின் தேனீக்கள் ஓடின என்று ஆசிரியர் அழகுபட உரைத்தார். காற்றுச் செல்லும் வழியே வளைந்தும், சுழன்றும் ஓடலால் சுழலளிகள் என்னப்பட்டன. அவை ஒன்றின்பின் ஒன்றாய் இடைவிடாது தொடர்ந்து நெருங்கிய ஒரே கோவையாய்ச் சென்றனவாதலால் மாரன்சிலைக் கவை நாண்போன்றிருந்தன. அந்த நாணும் சாதாரண கயிறுபோன்றல்லாமல் நவீனமானதும் காண்போர் கண்களைக் கவரும் வனப்புடையதும், கருப்பு வில்லிற்கு எவ்வகையிலும் ஒத்ததுமாயிருந்தபடியால் அணிநாண் என்னப்பட்டது. இவ்வடியில் அணிநாண், சுழலளி, சேரவோட, என்று ஆசிரியர் தன் கருத்துக்களை வெளியிட ஆழ்ந்தெண்ணமிட்டும் பாடுபட்டும் வரைந்திருப்பது, சிறந்த ஆங்கிலக்கவிகள் தாங்கள் எழுதும் கவிகள் பிழையுறுவண்ணம் இருக்கும்படிக்கும், படிப்போர்மனதிற்கு களிப்பை உண்டாக்கும்படிக்கும் எடுத்துக்கொள்ளும் சிரத்தையுடன் ஒப்பிடத் தக்கது. மூன்று நான்கு அடிகள், குயிலினது செய்கையை நுட்பமாய் நோக்கியுணர்ந்து அதற்கு உவமை காட்டி எழுதப்பட் டிருக்கின்றன. அநங்கன் வில்லுக்கு அணிநாண் கட்டிய பின்னர்க் கணைகளைத் தேடுவது இயற்கை. அக்கணைகளும் மானுடர் கைபுனைந் தியற்றாது இயற்கையிற் செய்யப்பட்டன. அவை குயிலென்னும் கொல்லனால் செந்தணலாகிய செந்தளிர் நெருங்கிய பொழிலாகிய உலைக்களத்தில், அதன் அலகாகிய குறட்டினால், தளிராகிய விரிந்த தகடுகொண்டு, சுருட்டிக் கோதி ஒதுக்கிச் சமைக்கப்பட்டன.

இச்சருக்கத்தில் கவி எடுத்துக்கொண்ட சிரமத்திற்கு இவ்விரண்டடிகளே சான்றாகும். இந்திரப்பிரத்தச்சருக்கத்தில் உற்றுநோக்கின் பொதுவில் உவமைகள் அமைந்திருப்பினும், அவைகளில் உபமான உபமேயங்கள் முற்றும் ஒத்திருக்கவில்லை. இச்சருக்கத்தில் ஆசிரியர் போதியஅளவு உழைத்து, காலத்தைச் செலவழித்து ஆலோசனைசெய்து எழுதியிருப்பது கொண்டாடத்தகுந்தது. ஆயினும் இச்செய்யுளில் ஒரே ஒரு குறையுளது. மாரனுக்குக் கணைகள் தாமரை சூதம் அசோகு முல்லை நீலம் என ஐவகைப் பூக்கள் சொல்லப்பட் டிருக்கின்றன வல்லாமல் தளிர்கள் அவனுக்குக் கணைகளாக உரைக்கப்பட் டிருக்கவில்லை. எனினும் அது மிகவும் சிறிய குறையாகப் பாவிக்கப்பட்டு, கவியின் பொதுப்பொருளே உயர்ந்ததாக எண்ணப்படவேண்டும். கருமான் இரும்புச் சலாகைகளிலேயே பழகுபவனாதலால் கருங்கொல்லன் என்பது, சற்று இரக்கமற்ற கொல்லன் என்று பொருள் காட்டிநிற்கும். குயில் கருநிறத்துடன், காதலர்க்கு விளைக்கும் துன்பத்தைக் கருதாத கன்னெஞ்சோடு கணை சமைப்பதால், அதுவும் இரக்க மற்றதே. மேலும், பிரிவாற்றாது வருந்துகிற தலைவன்தலைவியர்க்கும் தன்குரலால் அது இன்னல் விளைக்குமாதலால் எவ்விதத்திலும் அது கருங்கொல்லனே. மாந்தளிர் முதலிய தளிர்கள் செம்மை நிறத்தோடு செறிந்திருத்தலால் அச்சோலை முழுவதும் செந்நிறமுடையதாய் உலைக் கனலுக்கு ஒப்பிடப்பட்டது. தன் சிறிய அலகினாலே பரந்த தளிரைச் சுருட்டிக்கொள்வது தகடுபுரிந் தொதுக்குவ தாயிற்று.

# குலசேகரர்.

[429-வது பக்கத் தொடர்ச்சி]

## திருநாளைப் போவார்

கோலார்ந்த நெடுஞ்சார்ங்கம் கூனற் சங்கம்
கொலையாழி கொடுந்தண்டம் கொற்ற வொள்வாள்
காலார்ந்த கதிக்கருடன் என்னும் வென்றிக்
கடும்பறவை இவையனைத்தும் புறஞ்சூழ் காப்பச்
சேலார்ந்த நெடுங்கழனி சோலை சூழ்ந்த
திருவரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும்
மாலோனைக் கண்டின்பக் கலவி எய்தி
வல்வினையே னென்றுகொலோ வாழு நாளே. 8.

[கோல் - அம்பு; சார்ங்கம் - வில்; கூன் நல் - வளைந்த நல்ல; ஆழி - சக்கரம்; தண்டம் - கதாயுதம்; கால் ஆர்ந்த கதி - காற்றைப்போலப் போகும் செலவு; புறஞ்சூழ் காப்ப- சுற்றிலும் நின்று காவல்காக்க; சேல் - ஒருவகை மீன்; இன்பக்கலவி - பிரிவின்றி ஒன்று கலந்திருத்தல்]

(அன்பின் மிகுதியினாலே அச்சமில்லாத இடத்தும் காவல் வைக்கின்றார்கள் ஆழ்வார்கள்)

உறகல் உறகல் ஒண்சுட ராழியே சங்கே
அறவெறிநாந்தக வாளே அழகிய சார்ங்கமேதண்டே
இறவுபடாமலிருந்த எண்மர் உலோக பாலீர்காள்
பறவையரையா உறகல்பள்ளியறை குறிக்கொண்மின்

என்று பெரியாழ்வார் பாடுவதும் காண்க)

"அழகுப் புதையல்; அறக்கடல், இன்ப ஊற்று, குணக் குன்று; வெற்றி விளக்கு; அறிவுச் சாறுநிறைந்த அருட்கனி — இதற்கொரு காவல் வேண்டாவா. இதனைத்தீதணுகாதபடி காவலும் அமைந்தமை நமது நற்பேறே யன்றோ. அம்பொடு தொடுத்த நெடியவில் ஒருபுறம் காவல்; வளைந்த நல்ல சங்கம் ஒருபுறம் காவல்; கொலைசெய்யும் ஆழி ஒருபுறம் காவல்; கொடுந்தொழில் வல்ல பெருந்தடி ஒருபுறம் காவல். வெற்றியல்ல தறியாது மின்னிப்பொலியும் வாளொன்று ஒருபுறம் காவல்; காற்றினும் விரைந்தோடி வெற்றிபெறும் கருடன் ஒருபுறம் காவல். அவ்வூரில் அச்சம் என்பது எவருக்குத்தான் தோன்றும்; சேலுமன்றோ அஞ்சாது துள்ளித் திரிகின்றன. நீர்வளத்தால் சேல்கள் செருக்கித்திரியும் நீண்ட கழனிகளும் சோலைகளும் சூழ்ந்த திருவரங்கத்தே அரவணையிற் பள்ளிகொள்ளும் திருமாலைக் கண்டு, கண்டதும் அவனோடு ஒன்றுபட்டு இன்பஉருவாய் எந்நாள் வாழ்வேன். வல்வினையேனுக்கு அந்நாள் வருவதும் உண்டோ? ஒருநாள் கலந்து நின்று பிரிந்தால் துன்பம் பெரிதாகி வளரும். அத்தகைய துன்பக் கலவி இறைவனைக்கண்டார் பெறுவதில்லை. ஒளியைக்கண்டபின் இருளேது; இன்பமாம் இறைவனைக் கண்டபின் துன்பமேது. அவனைக் கண்டதும் இன்பக்கலவியே யாம் அடைவோம். நீரொடு நீர் கலந்தால் அதனைப் பிரிப்பார் யார். அவ்வாறு எளிதான வின்பக்கலவியை அடையும் நாள் எந்நாளோ?"

தூராத மனக்காதல் தொண்டர் தங்கள்
குழாம்குழுமித் திருப்புகழ்கள் பலவும் பாடி
ஆராத மனக்களிப்போ டழுத கண்ணீர்
மழைசோர நினைந்துருகி ஏத்தி நாளும்
சீரார்ந்த முழவோசை பரவை காட்டும்
திருவரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும்
போராழி யம்மானைக் கண்டு துள்ளிப்
பூதலத்தில் என்றுகொலோ புரளும் நாளே. 9.

[தூராத - தூர்க்கமுடியாத; குழுமி - கூடி; மழை சோர - மழைபோல் பெருகிவர; சீர் ஆர்ந்த - சிறந்த; முழவு - மத்தளம்.]

அரங்கத் தரவணைப் பள்ளியானைச் சுற்றியுள்ளார் பெருந்தகை மிக்கஅடியார்; அவர்களைக்காணலும்அவனைக்கண்டது போலாம். அவ்வடியவரோடு அணுகினாலே அவனை அடையலாம். அவரிடைச் செல்லின் நாமும் ஆண்டவன் பித்தே பெரிதாகி ஆடிப் பாடிப் புரள்வோம். அந்நிலை பெறுவ தெந்நாளோ—ஆண்டவன் அழிவிலாதவன். முடிவிலாத இன்பமானவன். இவனிடத்தே எழுந்த காதலுக்கும் முடிவுண்டோ? அழியாப் பொருள் மேலெழுந்த காதலும் அழியாததே யன்றோ? ஆகவே எம்பெருமானுக்கு மெய்த் தொண்டு பூண்டாரது உண்மையான மனக்காதலைத் தூர்க்கப் போமோ?

அத்தகைய தொண்டர் குழாமில் அடியேனும் கூடுவது எந்நாளோ! அவர்களோடு திருமாலின் திருப்புகழ்களைப் பாடும் நாள் எந்நாளோ? பாடியும் ஆராத மனமகிழ்ச்சியினால் கண்ணின்றும் மழைபோல நீர் பெருக இறைவனை நினைந்துருகும் நாள் எந்நாளோ? அவனை எந்நாளும் இந்த உயர்நிலையில் நின்று ஏத்தும் நாள் என்று தொடங்குமோ? சிறந்த முழவு முதலிய இன்னிசைக் கருவிகள் கடல்போல ஒலிக்கும் அத்தகைய திருவிழாப் பொலிவினை என்றும் உடைய திருவரங்கத்தே அரவணையில் பள்ளிகொள்வான் அவ்வாண்டவன். கொடியாரைக் கொன்றழித்தும், கூடிநின்ற அடியாரைக் காத்தளித்தும் உயர்வடைந்த ஆழியினைக் கையேந்தும் எம்மானைக் காணு நாள் எந்நாளோ! காணற்கரிய காட்சி கண்டமையால் அடக்கற் கரிய ஆர்வத்தாலே என்னையும் மறந்து என்னுடலையும் மறந்து துள்ளிக் குதித்து மண்மேல் புரளும் நாள் எந்நாளோ?

வன்பெருவா னகம்உய்ய அமரர் உய்ய
மண்ணுய்ய மண்ணுலகில் மனிதர் உய்யத்
துன்பமிகு துயரகல அயர்வொன் றில்லாச்
சுகம்வளர அகமகிழும் தொண்டர் வாழ
அன்பொடுதென் திசைநோக்கிப் பள்ளி கொள்ளும்
அணியரங்கன் திருமுற்றத் தடியார் தங்கள்
இன்பமிகு பெருங்குழுவு கண்டு யானும்
இசைந்துடனே என்றுகொலோ இருக்கு நாளே 10.

[வன் - அழியாத; உய்ய - பிழைக்க; அகம் - மனம்; அயர்வு - வருத்தம்]

காக்கும் கடவுளாகிய கடல்நிறப் பெரியோன் எவ்வுலகிலும் எல்லோரும் இனிதே வாழவன்றோ எண்ணங் கொள்வான். கொடியோர் வாழ்ந்த தென்னிலங்கையும் செழித்தோங்கத் தென்முகங்கொண்டு அதன்மேல் தனது தண்ணருள் விழிநாட்டம் படப் பள்ளிகொண் டருளினன் என்றால் அவன் அருள் என்னே என்னே; எவ்வுலகும் எவ்வெவரும் எவ்வெப் பொருளும் துன்பமிலாது பேரின்பம் பெற்றுவாழ



வேண்டுமெனவன்றோ தாய்போல் உலகினை ஒருவயிற்றடக்கிய பெரியோன் எண்ணுவான். வானகமும், வானவரும் மண்ணுலகும் மண்ணுலகினரும், வாழவன்றோ திருவரங்கத்தே பள்ளிகொண்டான். துன்பினைத்தரும் வினைகள் ஒழியவும், துன்பம் ஒரு துளியும் கலவாத இன்பமே பெருகவும் மனமகிழும் அவனடியார் வாழவும் அன்றோ தென்பால் நோக்கிப் பள்ளிகொண்டான். அவ்வடியாரோடு யான் கூடின் யானும் வாழ்வேன்; இன்பம் பெறுவேன். இன்பம் ஊட்டவந்த இறைவனை யானும் கண்டு அடியாரோடு கூடியாடிப் பாடுவ தெந்நாளோ. திருவரங்கத் திருமுற்றம் சென்றதும் இப்பேறு பெறுவேன்; ஆனால் போகு நாள் எந்நாளோ! அவனது அடியார் அவனது திருமுற்றத்தே நின்று அவனைக் கண்டு இன்பமே உருவாய் அனைவரும் ஒன்றுகூடிப் பாடியாடி அப்பெருங் காட்சியைக் கண்டு அக்குழுவோடும் மனமியைந்து வாழுநாள் எந்நாளோ? அரசனாய் உலகவாழ்க்கையில் சிறைப்பட்ட எனக்கும் இது கைகூடுவதோ?"

திடர்விளங்கு கரைப்பொன்னி நடுவு பாட்டுத்
திருவரங்கத் தரவணையிற் பள்ளி கொள்ளும்
கடல்விளங்கு கருமேனி யம்மான் தன்னைக்
கண்ணாரக் கண்டுகக்கும் காதல் தன்னால்
குடைவிளங்கு விறற்றானைக் கொற்ற ஒள்வாள்
கூடலர்கோன் கொடைக்குலசே கரன்சொற் செய்த
நடைவிளங்கு தமிழ்மாலை பத்தும் வல்லார்
நலந்திகழ்நா ரணனடிக்கீழ் நண்ணு வாரே. 11.

[திடர் - மேடு; நடுவு பாட்டு - நடுவிடத்தில். குடை- வெண் கொற்றக்குடை; விறல் - வெற்றி; தானை - சேனை; கொற்றம் - வெற்றி பெறும்; ஒள் - ஒளியுடைய; கூடலர் - பாண்டியர்; கொடை - தானம்]

வெண்கொற்றக் குடையினையும், வெற்றிபெறும் படையினையும், வெற்றிபெற்ற வாளினையும் உடையோராய்க் கொடையாளியாய்ப் பாண்டியர்க் கரசராய் விளங்கும் குலசேகரர் ஆனவர், பொன்னியாற்றின் மேடான கரைநடுவே விளங்கும் திருவரங்கத்தே அரவணையிற் பள்ளிகொள்ளும் கடல்போலும் கருமேனிகொண்ட அம்மானைக் கண்ணாரக் கண்டு உகக்கும் காதலால் பாடியருளிய செந்நடையான பத்துத் தமிழ்ப்பாக்களையும் பாடவல்லவர்கள் இன்பவடிவான இறைவனது இணையடியைச் சேர்ந்து இன்புறுவர்" என்று தம்மையும் தம்எண்ணத்தையும் பாடி முடிக்கின்றார் ஆழ்வார்.

கண்டுகக்கும் காதலோடு பாடிய பாக்கள் ஆதலின் திருவரங்கனைக் காண்பதற்கு முன்னரே பாடிய பாடல்கள் ஆகும். ஆனால் திருவரங்கத்தே பள்ளி கொள்ளும் பெருமாளை அங்கிருந்தபடியே புனைந்துரைத்துள்ளார் அன்றோ? அங்கே போகாது அந்நிலையை எங்ஙனம் இவர் அறிந்தார்? உள்ளுணர்வில் மிக்க ஆழ்வார் அங்குப் போய்த்தான் அறியவேண்டும் என்பதில்லையே. போகவேண்டும் என்ற எண்ணம் எழுந்ததும் எதனால்? பிறர் அந்நிலையைப் புகழக் கேட்டே யன்றோ? புகழக் கேட்டதையே புலவர் பெருமானாதலின் புனைந்து பாடுகின்றார். இனி, இரண்டாவது பாட்டிலே மணத்தூணைப் பற்றிப் பேசுகின்றாராதலின் ஆழ்வார் அரங்கநகர் அடைந்து ஆண்டவனது அடியிணை வணங்கிய பின்னரே இத்திருமொழி பாடினாராதல்வேண்டும் என்பர் ஒருசாரார். திருவரங்கத்தே இறைவனுக்கு எதிரே அவரது கடவுட் டிருமணமே ஒருருக்கொண்டு நிற்றல்போல இரண்டு தூண்கள் நிற்கின்றன. அவனழகிலே ஈடுபட்டு எதிரே நிற்போர்தம்மை மறந்து கீழ் விழாதபடி பிடித்துக்கொள்ளவே அத்தூண்கள் அங்குள்ளன என்பது திருமா லடியாரது மரபு. மணத்தூணைப் பற்றியும் அங்குச் சென்று வந்த அடியார் புகழக் கேட்டு ஆழ்வார் புனைந்து பாடியிருத்தல் ஆகாதோ?

மேற்கூறிய கதை உண்மையானால் இத்திருமொழியை ஆழ்வார் தமதுகடவுள் வாழ்க்கையின் தொடக்கத்திலேயே பாடினார் ஆதல் வேண்டும். முகுந்தமாலைபாடிய பின்னரே பெருமாள்திருமொழியைப் பாடினார் என்பது எவ்வாறு உண்மையாகும். முகுந்தமாலை முன்னிலையில் பாடப்பட்டது என்ற கொள்கையை ஆராயும்போது இதனையும் உற்று நோக்கி ஒரு முடிவிற்கு வருதல் கூடுமாதலின் இதனைச் சிறிது போக்கி ஆராய்வோம். இதுபோது குருபரம்பரை கூறும் திருநாளைப்போவார் கதை உண்மையே என்பதனை அறிந்து இன்புறுவோம்.

189058

# கும்பகர்ணன்.

413பக்கத் தொடர்ச்சி.

இவ்வாறு இராவணன் சிங்காரஞ்செய்யும்போது கும்பகர்ணனுக்கு இடது கண்ணும் தோளும் துடித்தன. அப்பொழுது அவன் தமயனிடம், 'இவ்வாறுநீ எனக்கு அலங்காரஞ் செய்யக் காரணமென்ன?' என்று கேட்டான். அதற்கிராவணன், 'இரண்டு மானிடர் வானரப்படையுடன் வந்து நமது நகரத்தை முற்றுகை போட்டிருக்கின்றனர். நீ சென்று அவருயிரை யுண்டு வா'வென்றான். இதைக்கேட்டதும் கும்பகர்ணன் கூறலாயினான்.

"வந்ததா சண்டை; கற்புடைய் ஜானகியின் துயரம் இன்னும் தீரவில்லையா? நமது பரந்துசிறந்த புகழ் போய் இறக்குங்காலம் வந்ததா? இன்னும் சீதையை விடவில்லையா? இஃதெல்லாம் விதியின் வலியேயாகும்.

கல்லெலா முலகினை வரம்பு கட்டவும்
சொல்லலாம் பெருவழி யிராமன் தோள்களை
வெல்லலா மென்பதும் சீதை மேனியைப்
புல்லலா மென்பதும் போலுமால் ஐயா

புலத்தியன் வழிமுதல்வந்த நமது குலத்தியல்பு அழிந்தது. உனக்கு வெற்றியுண்டாகுமா? இது உன் வலிமை யழிவிற்குக் காரணமாகும்.

நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு.

இந்திரனுக்கு வெற்றியையும் தேவருலகத்தையும் கொடுத்து நீ நின் கிளைஞரொடு மாண்டாய்; எல்லாத் தேவர்களையும் வருத்திய உனக்குநற்கதியுமில்லை. முன் உனக்கு அழியாச்செல்வத்தையும், வலிமையும் வெற்றியையுங் கொடுத்து இப்பொழுது மறைந்திருக்கிற

தர்மத்தை யார் எடுத்து நிறுத்துவார். அடைக்கலமும், தர்மமும், நல்லொழுக்கமும், உண்மையுமுடையவர்களே குறைவிலாது நீடு வாழ்வார்கள். அஃதின்றி, வஞ்சமும், பாவமும், பொய்யும் வல்லநாம் தப்பிப் பிழைப்போமா? நீஅவர்களிடஞ் சென்று நயக்கிலாயெனில் இறப்பதும் திண்ணம். காலினுற் காற்றைப்போல் கடலைத் தாண்டிவந்த வன்குரங்குகள் உள. சீதையும் இவ்விடம்விட்டுப் போகிலாள். வாலியின் மார்புருவிச்சென்ற அம்புகளுண்டு; யாமுமிருக்கின்றோம். ஒரு குறைவுமுண்டாகாது.

தய்யலை விட்டவன் சரணம் தாழ்ந்துநின்
மய்யறு தம்பியோ டளவ ளாவுதல்
உய்திற மன்றெனின் உளது வேறுமோர்
செய்திற முண்டது தெளிந்து கோடியால்

இல்லையானுல் வேறொரு காரியமுண்டு, சொல்கிறேன். பந்திபந்தியாக நம் சேனைகளை யனுப்பி அவைகள் இறந்தபின் நீதனித்திராமல் போர் செய்வதே தகுதி.''

இவைகளைக் கேட்ட இராவணன், "கும்பகர்ணு! வரும் காரியத்தை யறிய உன்னை யழைக்கவில்லை. உடனே சென்று சிறுதொழில் மானிடரைக் கொல். நீ எனக்கு அறிவுடை யமைச்சனன்று. அவர்களுக்குப் பயந்த உன் வீரம் வறிதாகும்

மறங்கிளர் செருவினுக் குரிமை மாண்டனை
பிறங்கிய தசையொடு நறவும் பெற்றனை
இறங்கிய கண்முகிழ்த்து இரவு மெல்லியும்
உறங்குதி போயென உளையக் கூறினன்.

இரண்டு மனிதரை வணங்குவதுமன்றிக் கூனற்குரங்கையும் கும்பிட்டு நிற்றல் உன் தம்பியான வீபீடணனுக்கும் உனக்குமே தக்கதாகும்; யானது செய்யேன்; நீ இங்கு நின்று எழுந்து போய்விடு;'' என்று கும்பகர்ணன் வருந்துமாறு கூறி, வீரவார்த்தை விளம்பி, ஆயுதங்களையும் தேரையும் கொண்டுவரச் சொல்லிப் புறப்பட்டான். உடனே கும்பகர்ணன் சென்றுவணங்கி, 'பொறுத்தரு'ளென்று புகன்று தன் சூலத்தையும் தோளில் தாங்கிக்கொண்டு, 'இன்னும் ஓர் சொல்லுண்டு கூறுவதற்கு அதையுங் கேள்',எனக் கூறலாயினன்.

"யான் வெற்றிகொண்டு, வருவேனென் றெண்ணவில்லை. விதியானது என்னைப் பிடர்பிடித்துத் தள்ளுகின்றது. யான் போர்முனையி லிறப்பேனுயின் பிறகு சீதையைக் களிப்புடன் அவர்களிடம் கொண்டுவிட்டுவிடு. இந்திரஜித்து இலக்குவன் கையா லிறப்பது திண்ணம். உன் சேனைகளும் அழியும். பிறகு உனக்குறுவதைச்செய். அவர்கள் என்னை வென்றாரெனில் உன்னையும் வெல்வதற் கையமில்லை;

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு

ஆதலால் சீதையை இன்றே கொண்டுவிடுவது தக்க தன்மையாகும். நிற்க,

கொற்றவ! இதுகாறும் யான் யாதேனும் குற்றங்கள் செய்துளனுயின் அவைகளைப் பொறுத்திடுக. இனிமேல் உன் முகத்தில் விழிப்பது அருமை'' என்றுகூறி விடைபெற்றுப் போயினன்.

உடனே இராவணனது கண்கள் மிக்க வருத்தத்தினுல் நீரையும் குருதியையும் பொழிந்தன. அனைவரும் அழுதனர். கும்பகருணனும் வாயிலில் வந்தான். நால்வகைச் சேனைகளும் தயாராய் வந்தன. உடனே கும்பகர்ணனும்,

ஆயிரம் கோளரி யாளி ஆயிரம்
ஆயிரம் மதகரி பூத மாயிரம்
மாயிரு ஞாலத்தைச் சுமப்ப வாங்குவ
தேயிருஞ் சுடர்மணித் தேரொன் றேறினன்.

போருக்குரிய எல்லாப் படைகளையும் பல வீரர்கள் சுமந்து வந்தனர். இஃதன்றிக் கும்பகர்ணனது தேருக்குப் பின்னுல் பலர் கட்சாடிகளை எடுத்துவந்தனர். நறவில்வெந்த ஊனை ஆயிரம் வண்டிகளில் வைத்துக்கொண்டு பலர் அவனுக்கு நறவையும் ஊனையும் மாறிமாறி எடுத்துக்கொடுக்க வாங்கிப் புசித்துக் கொண்டே வந்தான். இவ்வாறு

பாந்தளி னெடுந்தலை வழுவிப் பாரொடும்
வேந்தன விளங்கிய மேரு மால்வரை
போந்தது போற்பொலந் தேரிற் பொங்கிய
ஏந்தலை ஏந்தெழில் ராமன் நோக்கினன்.

நோக்கிய ராமன் அவனது தேர்க்கொடியை உற்று நோக்கினன். அதுவீணைக்கொடியின்றிச் சிங்கக்கொடியாயிருந்ததால் விரைந்து ஐயங்கொண்டு வீடணனை நோக்கி "வீடணு! இவன் யார்? இவனது ஒரு தோளை விட்டு மற்றொரு தோளைப் பார்ப்பதற்குப் பலநாள் வேண்டுமே. மேருமலை கால்முளைக்கப்பெற்றுப் போர் செய்ய வருகின்றதோ! ஒருவேளை இராவணன் குரங்குச் சேனையைப் பயப்படுத்த எடுத்த உருவமோ! விரைவில் இவன் யாரெனச்சொல்'' லென்றான். கேட்டதும் வீபீடணன் வணங்கிக் கூறலாயினன்.

"ஐயா! அற்ப வாழ்வுடைய இலங்கைவேந்தன் பின்னேனும் என் முன்னேனுமாகிய கும்பகர்ணன் இவனே. எந்தாய்!

தவனுணங் கியரும் வேதத்
தலைவரு முணரும் தன்மை
சிவனுணர்ந்த அலரின் மேலைத்
திசைமுக னுணருந் தேவன்
அவனுணர்ந் தெழுந்த காலத்து
அசுரர்கள் படுவ ரெல்லாம்
இவனுணர்ந் தெழுந்த காலத்
திமையவர் படுவர்

"ஊழிக்காலம் உறங்குவான்; எமனுக்கு எமன்; காற்றிற்குக் காற்று. முன்னொருகாலத்தில் இந்திரன் ஐராவதத்தின்மே லிருக்கும்பொழுதே அதன் பின் காலிரண்டையும் பிடித்துத் தூக்கிக் காற்றுடிபோற் சுற்றி வெருவச்செய்து வெற்றிகொண்டான். வடவைத் தீயையும் காற்றையும் பிழிந்து சாறெடுக்கும் வலிமை யுடையன். கடலில் நடப்பவன். ஊனுண்டு கொழுத்தவன். அரிய தவஞ்செய்து பெரிய வரம் பெற்றவன். பேயைவிடப் பெரியன். இதுகாறும் தூங்குவதால் உலகத்தார் பிழைத்திருக்கின்றார்கள். திருமாலின் சக்கிரத்தினிடமிருந்து சூலத்தைச் சிவபிரான் பெற்று இவனுக்குக் கொடுத்தனர். அதனுல் பலரைக் கொன்றிருக்கின்றான். போர்செய்த தேவர் முதுகைக் கண்டானேயன்றி அவரது முகத்தைக் கண்டவனல்லன். இராவணனுக்கு இரண்டு தடவைக் கதிமாக இக்காரியஞ் செய்தல் தருமமன்றெனப் புத்திகூறினன்.



அவன் மறுத்தால் திட்டமாகக் கேடுறு மென்று கூறியுங் கேளாததால் நாமிருத்தல் நன்றன்றென்று இறப்பதற் குன்னெதிரில் வந்திருக்கின்று''னென்று கூறினன்.

இவையனைத்தும் பக்கத்திலிருந்து கேட்டுக்கொண்டிருந்த சுக்கிரீவன் "இவனைக் கொன்று ஒருபயனுமில்லை. அவனை நம்முடன் சேர்த்துக்கொண்டால் இவ்வீடணனுடைய துயரம் தீருமென்றெண்ணுகின்றேன்.'' என்றலும் இராமன் "அதுவும் நன்றே! ஆயின் இக்காரியத்தை அவனிடஞ் சென்று கூறுவார் யாவ''ரென்றான்.

உடனே விபீடணன், "கட்டளையுண்டானுல் யான் சென்று சொல்லி வருகின்றே''னென்னலும் இராமன் விடை கொடுத்தான்.

## பட்டினத்துப் பிள்ளையார்.

" Let thyself drive in the breath of God and be as a leaf in the tempest ; put thyself in His hand and be as the Sword that strikes and the arrow that leaps to its target. Let thy mind be as the spring of the machine, let thy force be as the shooting of a piston, let thy work be as the grinding and shaping descent of the steel on its object. Let thy speech be the clang of the hammer on the anvil and the moan of the engine in its labour and the cry of the trumpet that proclaims the force of God to the regions. In whatever way do as an instrument the work that is natural to thee and appointed."

" The sword has a joy in the battle-play, the arrow has a mirth in its hiss and its leaping, the earth has a rapture in its dizzy whirl through space, the sun has the royal ecstacy of its blazing splendours and its eternal motion. O thou self-conscious instrument, take thou too the delight of thy own appointed workings. "

I

மாந்தர்தம் லக்ஷியத்திற்கிணங்கிய உள்ளக் கருத்தைப்பற்றிய தெள்ளிய உறுதிமொழிகளே தத்வ ஞானமாகும். அவர்களால் வேண்டப்படுவனவற்றைப் பல துறைகளில் பூர்த்திசெய்து உயர்த்துமாறு பல்வேறு கலைகள் தோன்றிப் பெருகுகின்றன. அக்கலைகளிலெல்லாம் முதன்மையானவை, மூலதத்வ ஆராய்ச்சியும் முடிபுமாம். இம்மைக் குரியவைகளையளித்து மாந்தர் சுகித்திருத்தற்கான முறைகளைப் பிரகிருதிசாஸ்திரங்கள் தேடி அறிவித்து உதவுகின்றதைப்போல், யாவற்றிற்கும் அடிப்படையான விஷயங்களைத் தெரிவித்து, நல்லெண்ணங்களையெழுப்பிப் பெருக்குவித்துச் சத்காரியங்களைக் காண்பித்து, நன்னெறியிலிருத்திச் சத்தியம் இனிப்புவனப்பு ஆனந்தத்தின் மகவாய், மற்று அதன் உருவேயாய் விளங்கத் தூண்டி அருள்புரிவது தத்வ ஞானம். மூலவஸ்துவின் குணுதிசயத்தையும், இம்மூலவஸ்துவுக்கும் பிரபஞ்சாதிகளனைத்திற்கும்உள்ள இணக்கத்தையும், அறிவுறுத்துவதும் தத்வ ஞானமாகும். உண்டு உறங்கிக் களித்ததுபோக எஞ்சிநிற்கும் நேரங்களில், தன்னைப்பற்றியும்; சதாகாலமும் மாறியும் மறைந்தும் தோன்றியும் பெருகியும் தேய்வதுமாய தன்மையுள்ள உலகாதிகளைப் பற்றியும்; இவைகளையொட்டிச் சிந்தனை சொல் செயல்களெல்லாம் இயங்குவதையும்; வலி வருத்த மேக்கமாகியவைகள் ஒரு பக்கத்திலும் சுகபோகங்கள் மற்றொரு பக்கத்திலுமாய்க் கொள்கை, அநுஷ்டானம், பலன்களைச்சார்ந்தவரையிலும், அறம் மறம்என்றவைகள் எப்பொழுதும் மாறிமாறி மாக்களைத் தத்தளிக்கச் செய்வதையும்; அறவோரும் அறிஞரும் துக்கிப்பதையும், மௌட்டியரும் தீயரும் உல்லாசிப்பதையும், ஊன்றிப்பார்த்து, தெளிவாக ஆராய்ந்து, தீர்க்கமாக ஆலோசித்து, ஓர் உறுதி முடிவுக்கு வந்து, மாந்தரை உயர்த்தி ஆனந்திக்கச் செய்தலே தத்வ ஞானத்தின் பயனுகும். மானுடர்க்குப் பொதுவான இடையூறிடுக்கண்களைக் கண்டு, தர்க்க நுட்பங்களால் மிக்க சாமர்த்தியத்துடன் மேற்காட்டிய விஷயங்களை உருட்டிப் புரட்டி ஒன்றுபடுத்தி மயக்கிப் புறத்தே ஒதுக்கி, வாழ்க்கை விநோதத்தையும் மர்மத்தையும் தெரிவித்துவிட்டதாகக் கொக்கரிக்கும் தத்துவ வாதம், இகழ்ந்து தள்ளப்படுதற்கே உரியது. மெய் பொய், மேன்மை தாழ்மை, பிறப்பு இறப்பு, சுகம் துக்கம், இன்பம் ஏக்கம், அன்பு குரூரம், இனிமை கொடுமை, போர் சமாதானம், தோல்வி வெற்றி, முதலியவை இல்பொருள்களல்ல. நன்மையின் குறையே தீமையெனவும், இன்பத்தின் அடக்கமே துன்பமெனவும், பெரும்புரட்சிகளினின்றே சமாதானம் உதித்து நிலவுவதெனவும், ஒளியின் ஒடுக்கம் இருளெனவும், அறத்தின் இன்மையே மறமெனவும் வாதிப்பவர் உளர். தோற்றவுலகை யொட்டியவரையிலும், நன்மையை நம்புபவர் தீமையையும் நம்ப வேண்டும். அறத்தைச் சிலாகிப்பவர் மறத்தின் இருப்பையும் பெருக்கத்தையும் ஒப்பவேண்டும். துக்கமய வாதத்திற்கு எவ்வளவு சான்றுகள் உளவோ, அவ்வளவு சான்றுகள் சுகபோக வாதத்திற்கும் உள என்ற விஷயங்களை, நாம் மனத்தில் பதிக்கவேண்டும். வார்த்தைகளை வீணில் பன்னிப் பின்னிக் கழறு வதினுல் உண்மை புலப்படாது.

இறந்தன இறந்துவிட்டன வல்ல. எஞ்ஞான்றும் மாறுவதும் வளர்வதும் பரவுவதும் ஆய மானுடர்க்குரிய குணத்திற்கும் தேவைக்கும் ஏற்றனவல்லவாய் முரண்பட நேர்கின்றவைகளே பழையவற்றினின்று கழிந்துபோக, மேலுயர்த்தி முன்செலுத்தக் கூடியவைகளே விஞ்சிநின்று, காலப் போக்கிற்கேற்ப ஜன சமுதாயத்திற்கானபடி, அறிஞர் அவைகளைப் பெருக்கியும் மாற்றியும், அல்லது அவசியமாயின், நூதன வழிகளைக் கற்பித்தும் வருகின்றனரென்பது சரித்திர வுண்மையாகும். ஒவ்வொரு கலையும் சாஸ்திரமும் மதமும் தத்துவபோதனையும் ஆசாரமும் அவ்வக்காலத்தினர், மனம் புத்தி புலன்களின், விரிவு வளர்ச்சி போக்குகளையே அடிப்படையாகக்கொண்டு வெளியாவன. உண்மை என்பது பல பாகுபாடுகளுடையது, பலவர்ணங்களாலாயது.ஒவ்

வொரு நடத்தையிலும், ஒவ்வொரு கருத்து, அல்லது லக்ஷியத்திலும், எப்பொழுதும் ஒருபடித்தாகவே உள்ள பொருளும், அவ்வப்போதைய ஜனசமூகத்தின் உள்ளவிரிவுக்கும் மனோவளர்ச்சிக்கும் புலனுணர்ச்சிக்கும் ஆனபடி மாறுபடும் என்பதை அறிஞர் அறிய வேண்டும். மதாசாரங்களும் தத்துவபிரச்னைகளும் ஜனசமுதாய வொழுக்கங்களின் அந்தரங்க முடிபுகளும் ஒன்றேயானாலும், அம்முடிபு எய்துதற்கு அநுசரிக்கவேண்டிய முறைகள் மாறுவன, கணக்கற்றன. தேகாரோக்கியம், மனோவன்மை, விசாலம், இதயத்தூய்மை அகத்திருப்தி, அல்லது சுகம் இன்பம் ஆனந்தம், என்றவைகளையே ஒவ்வொரு ஜீவான்மாவும் நாடி, அவைகளைப் பெற்று அநுபவித்தற்கான வழிகளைப் பின்பற்றி இயங்குவதானாலும், ஒவ்வோர் காலத்திலும் ஒவ்வொரு ஜாதியார்க்குள்ளும், மற்று, ஒவ்வொரு ஆன்மாவுள்ளும் வெவ்வேறு சமயத்திலும், அவைகளைப்பற்றி வெவ்வேறு கொள்கைகளும் மார்க்கங்களும் அங்கீகரித்துக் கையாளப்படுவன வென்ற விஷயம் யாவரும் அறிந்து ஒப்பியதாகும்.

இன்னமும், மிதமீறிப் பரிபூரணமாக இச்சித்துப் போகித்தவைகளைப் பின் தூஷித்துத் துறந்து, அவற்றிற்கு நேர் எதிரானவைகளைக் கைக்கொண்டு ஒழுகுதல் மானுட சுபாவத்தின் போக்குகளில் ஒன்றாகும். நிரீசுவரவாதி பக்திமானாகவும், சுகபோகி கடுந்துறவி யாகவும் மாறுவதைப் பார்த்துவருகிறோம். லோகாயதம் பிரபலமாகி நிற்கையில், படிப்படியாக இது வெறுக்கப்பட்டுக் குருட்டுபக்தி மேலோங்குவதும், அடிமைத்தனம் செழித்து நிற்கையில், சுதந்தரப்பிரியம் முளைகிளம்பிப் பரவுவதும், துர்ப்பலமும் கோழைத்தனமும் குடிகொண்டவரிடம் வீரியவுணர்ச்சி தோன்றி வியாபிப்பதும் சரிதவுண்மைகளேயாம்.

(தொடரும்)

# தமிழ்ப் பாடம் 75.

## [நளவெண்பா.]

(432 பக்கத் தொடர்ச்சி)

### கலி நீங்கு காண்டம்.

நாடுதுறந்து, மக்களையும் பிரிந்து செல்வமெல்லாம் இழந்து காட்டில் திரிகின்ற நிலையில்இருந்த தமயந்தி தன் நாயகனைப் போய் ஓர் பொற்புள்ளைப் பிடித்துத் தரச்சொன்னதால், அவள், "தேன்பிடிக்குந் தண்துழாய்ச் செங்கண் கருமுகிலை மான் பிடிக்கச் சொன்ன மயிலோபோல்" ஆயினாள் என்று முன் புகழேந்திப்புலவர் காட்டினார். வீமன்மகள், ஜானகிக்கு ஒப்பாவது அவ்வொன்றினால் மாத்திரமே யன்று. கைகேசி சொற்கிணங்கி வனம்புகப் புறப்பட்ட இராமனோடு சென்ற சீதை, அயோத்திநகரத்தின் மதிலினது கடைவாயிலைக் கடந்தவுடன் தன் நாயகனை நோக்கி, "நாம் அடையவேண்டிய கானம் எது" என்று கேட்டாள் என்பது, பின் இராமன் அநுமனிடத்தில் சொல்லியனுப்புகின்ற அடையாளங்களி லொன்றினால் தெரியவருகிறது. அவ்விதமே தமயந்தியும் விதர்ப்ப நாட்டிலிருந்து தேர் ஏறியதும் ஏறாததுமாய் நளனை, "நம் மாவிந்தநகரத்திற்கு, 'ஏனை நெறித்தூரம் இனி எத்தனை'' எனக் கேட்டனள். சீதைக்கு இராமன் சொல்லிய பதில் என்னவென்பது தெரியவில்லை. நளனோ தமயந்திக்கு, "இந்த மலையுங் கடந்து அதற்கப்புறம் இருக்கின்ற ஏழுமலைகளையும் கடந்துவிட்டால், பின் மாவிந்தம் அடுத்த அடி" என்று விளையாட்டாகக் கூறினான். அவ்வெட்டு மலைகளையும் ஓர் இரவிலேயே கழித்து நிடதேசம் சென்றடைந்த நளன் ஒரு சோலையில் தங்கியிருந்து புஷ்கரனை மறு சூதிற்கழைக்கவும், அவன் வந்து இவனைச் சந்திக்கலாவதை அடுத்த நான்கு செய்யுள்கள் கூறுகின்றன.

இக்கங்குல் போக விகல்வே னளனெறிநீர்
செய்க்கங்கு பாயுந் திருநாடு—புக்கங்
கிருக்குமா காண்பான்போ லேறினான் குன்றில்
செருக்குமான் றேர்வெய்யோன் சென்று. 84

பொழிப்புரை.—இந்த இரவுகழியவும், பகையையுடைய வேலாயுதத்தையுடைய நளன், அலை எறிகின்ற நீர் அங்கு வயலில் பாயும் அழகிய நாட்டை அடைந்து அங்கு இருக்கின்ற பெருமையைக் காணவேண்டுமென்னும் ஆசையை உடையவன் என்னும் படி சூரியன், களிப்புடைய குதிரைகளையுடைய தன் தேரில் விரைந்துவந்து உதயகிரியில் ஏறினான்.

குறிப்புரை:-என்றையும்போல் இயற்கையாக உதிக்கின்ற சூரியன், அன்றைக்கு நளன் தன் நாடு மீண்டதையும் வைபவத்தைக் காணும் ஆசையால் வந்தான், என்று கதைக்குஒட்டிக் கவி தன்னுடைய குறிப்பைச் சூரியன்மேல் ஏற்றிச் சொல்வதால் இது தற்குறிப்பேற்ற வணி. தற்குறிப்பேற்ற அணியில் பலவகை உட்பிரிவுகள் இருப்பதை முன் கூறியிருக்கின்றோம். சூரியன் உதித்தது நளன் இருந்ததைக் காணவேண்டும் என்னும் பயனைக் கருதிய குறிப்பினால் நிகழ்ந்ததென்று சொல்வதால், இது பயன்தற்குறிப்பேற்றவணியாகும். இனி, நளன் சோலையில் வந்து தங்கியதும் சூரியன் உதயமானதும் ஆகிய இரண்டும் நிகழ்ந்தன. வாஸ்தவத்தில் அவ்விரண்டிற்கும் ஒரு சம்பந்தமும் இல்லாமற்போனாலும் அந்தச் சம்பந்தம் இருக்கின்றதென்று சொல்வதற்கு இங்கே இடம் உளது. ஆகையால் இது உளபுலப்பயன் தற்குறிப்பேற்ற அணியில் அமையும்.

மன்றலிளங் கோதையொடு மக்களுந் தானுமொரு
வென்றி மணிநெடுந்தேர் மேலேறிச்—சென்றடைந்
மாவிந்த மென்னும் வளநகரஞ் சூழ்ந்தவொரு [தான்
பூவிந்தை வாழும் பொழில். 85.

பொழிப்புரை:— வாசனைபொருந்திய இளமையாகிய பூமாலையை அணிந்த தமயந்தியும் மக்களும் தானும் ஒரு வெற்றிபொருந்திய அழகிய பெரிய தேர் மேல் ஏறிச்சென்று, மலர்களின் ஆச்சரியம் நிரம்பியதும் மாவிந்தம் என்னும் வளப்பமுடைய நகரத்தைச் சூழ்ந்திருந்ததுமான ஒரு சோலையை அடைந்தான், நளன்.



மற்றவனுக் கென்வரவு சொல்லி மறுசூதுக்
குற்ற பணைய முளதென்று—கொற்றவனைக்
கொண்டணைவீ ரென்று குலத்தூ தரைவிடுத்தான்
தண்தெரியற் றேர்வேந்தன் றான். 86

பொழிப்புரை:-குளிர்ச்சியாகிய மாலையை அணிந்த, தேரையுடைய வேந்தனாகிய நளன், "நான் வந்திருக்கின்றேனென்றும்,மறுசூது ஆடுவதற்குஇப்பொழுது பந்தயப்பொருள் இருக்கின்றதென்றும் சொல்லி அவனை அழைத்து வாருங்கள்" என்று தன்னுடைய சிறந்த தூதர்களை அனுப்பினான்.

மாய நெடுஞ்சூதில் வஞ்சித்த வன்னெஞ்சன்
தூய நறுமலர்ப்பூஞ் சோலைவாய்—ஆய
பெருந்தானை சூழப் பெடைநடையா ளோடும்
இருந்தானைக் கண்டா னெதிர். 87.

பொழிப்புரை:—வஞ்சனை மிகுந்த சூதாட்டத்தில் நளனுடைய செல்வங்களையெல்லாம் அபகரித்த கொடிய மனமுடைய புஷ்கரன்,தூய்மையான வாசனையுடைய மலர்கள் நிறைந்த அழகிய சோலையில், பெருமைபொருந்திய சைனியங்கள் சூழப் பெண்ணன்னம் போன்ற நடையுடைய தமயந்தியுடன் இருந்த நளனை எதிரில் கண்டான்.

குறிப்பு:- சோலைவாய், என்பதிலுள்ள வாய் என்பது இடப்பொருளில் வந்த ஏழாம்வேற்றுமை யுருபு.

பெடைநடையாள், என்னும் தொடர் பெடை போன்ற நடையாள் என விரியும். ஆகையால் அது உவமத் தொகை.

இருந்தானை, என்பது வினையாலணையும் பெயர்; இரண்டாம் வேற்றுமை ஏற்றிருக்கின்றது.

### இலக்கணம்.

இதுவரையில் சொல்லிவந்த தொகைநிலைத் தொடர்களெல்லாம், தொடர்ந்துவரும் அந்த இரண்டு சொற்களுக்கு நடுவிலே மாத்திரம், ஏதாவது உருபு மாத்திரமோ, உருபொடு சில சொற்களுங் கூடவோ, தொக்கு இருக்குந் தன்மையன. இவ்வாறு இடையிலே தொக்கு இருக்கும் உருபும் சொல்லும் அர்த்தம் பூர்த்தியாவதற்கு அவசியமானவைகளா யிருக்கும். மண்குடம், (மண்ணால் செய்த குடம்) என்ற தொடரில் ஆல் என்னும் உருபும், செய்த என்னும் சொல்லும் தொக்கிருப்பது, மண் குடம் என்ற நிலைமொழி வருமொழிகளுக்கு இடையில்தான். இதனில் வேறொன்றும் தொக்கு இல்லை.

ஆனாலும் உம்மைத்தொகையில் நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையில் 'உம்' என்ற எண்ணுப் பொருளுடைய இடைச்சொல் தொக்கு இருப்பதோடு வருமொழிக்கப்புறமும் ஒரு 'உம்' சேர்த்துக் கொள்ள வேண்டிஇருக்கிறது. 'இரண்டரை' என்ற தொடர் உம்மைத் தொகை. அது 'இரண்டும் அரையும்' என்று விரியும், ஆகையால், தொடர்கின்றசொற்களுக்கு நடுவிலே ஒரு உம்மையும், தொடரின் இறுதியிலே ஒரு உம்மையும் மறைந்திருக்கக் காண்கின்றோம்.

"இப்புத்தகத்திற்கு ரூபா ஒன்றரை கொடுத்தேன்" என்ற வாக்கியத்திலுள்ள 'ஒன்றரை' என்னும் உம்மைத்தொகைநிலைத் தொடரை 'ஒன்றும் அரையும்' என விரித்துவைத்தால் அவ்வாக்கியம் அப்படியே பொருள்படுவதற்குப் போதும். அவ்வாறின்றித் "தமிழில் உயிர்மெய் இருநூற்றுப்பதினாறு" என்று சொல்லும்போது, 'உயிர்மெய்' என்ற தொகையை 'உயிரும் மெய்யும்' என்று மாத்திரம் விரித்துக் கொண்டால் அவ்வாக்கியம் பொருள் படாது. "தமிழில் உயிரும் மெய்யும் இருநூற்றுப்பதினாறு" என்றால் என்ன அர்த்தம்? உயிர் பன்னிரண்டு, மெய் பதினெட்டுத்தானே. ஆகையால் 'உயிர்மெய் இருநூற்றுப்பதினாறு' என்பதில் உயிர் மெய் என்ற தொகை விரிந்தால் "உயிரும் மெய்யும் சேர்ந்து ஆகிய எழுத்துக்கள்" என வரவேண்டியது அவசியமாயிருக்கின்றது. விரிந்தால் அவசியமாக வரவேண்டிய சொற்கள், தொகைநிலைத்தொடரில் தொக்கு இருக்கின்றன என்று சொல்வோம். இந்தச் "சேர்ந்து," "ஆகிய" என்றசொற்கள் நிலைமொழிக்கும் வருமொழிக்கும் நடுவில் அல்லாமல் அத்தொடரின் இறுதியில் தொக்கு இருக்கின்றன. இவ்விதம் நடுவிலே மாத்திரம் அல்லாமல் கடையிலும் ஏதேனும் சொற்கள் தொக்கு இருக்குமாயின் அத்தொகைக்கு அன்மொழித்தொகை என்று பெயர். அதாவது "நடுவிலே தொக்கு இருப்பவைகள் மாத்திரம் அல்லாமல் கடையிலேயும் மொழிகள் தொக்கு இருக்கின்றதொகை" என்பது அதன் அர்த்தம். "உயிர்மெய் இருநூற்றுப்பதினாறு," அல்லது, 'க என்பது ஓர் உயிர்மெய்", என்பனபோன்ற வாக்கியங்களிலிருக்கின்ற 'உயிர்மெய்', என்னும் தொகை உம்மைத் தொகை அன்று. அது அன்மொழித்தெகை. எனினும் நடுவிலே தொக்கு இருக்கின்ற 'உம்மை'யைக் கருதும்போது அது உம்மைத்தொகையாகவும், இறுதியில் தொக்கு இருக்கின்ற "சேர்ந்து ஆகிய எழுத்து" என்று சொற்களைக் கருதும்போது அன்மொழித்தொகையும் ஆவதால், இதனை **"உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை"** என்று அழைப்பர். வாக்கியத்தின் பொருளை ஒட்டி ஒரு தொகை உம்மைத்தொகையா அல்லது அன்மொழித்தொகையா என்று தீர்மானம் செய்யவேண்டும். ஒரு தொடர் ஒரு வாக்கியத்தில் உம்மைத் தொகையாயிருக்கும். அதுவே வேறொரு வாக்கியத்தில் உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையாகும். உதாரணம் ஒன்று பார்ப்போம். "வெற்றிலை பாக்கு வாங்கினான்" என்போமாயின், 'வெற்றிலைபாக்கு' என்னும் தொகை 'வெற்றிலை உம் பாக்குஉம்' என விரிந்து வாக்கியத்தில் "வெற்றிலையும் பாக்கும் வாங்கினான்" என்று பொருள்பட அமையும். இதனில் 'உம்' தவிர வேறொன்றும் தொக்கு இல்லையாகையால் இது உம்மைத்தொகை. ஆனால், "இது வெற்றிலைபாக்குக் கடை" என்போமாயின் வெற்றிலையும் பாக்கும் என்பது மாத்திரமல்லாமல் 'விற்கின்ற' என்ற வொரு சொல்லும் இறுதியில் விரிந்து, "வெற்றிலையும் பாக்கும் விற்கின்ற கடை" என்று ஆகவேண்டிய அவசியத்தால் இங்கு 'வெற்றிலைபாக்கு', என்ற தொடர், உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை ஆகின்றது.

# கம்ப ராமாயணம்

## பாலகாண்டம்

### 13. எழுச்சிப் படலம்.

அரிவையர் குறையல வந்தணர் நிறையே.

எம்மிறை யிராமன்றன் நன்மண விழாவணி காணுமா விழைந்த வவ் வயோத்தி மகளிரும், மைந்தரும் "கடையுக முடிவினிற் புடைபெயர் கடலென" வெழுந்தன ரென்றதனமைதி யிங்குஐயுறநிற்கின்ற தெனினும், கம்பர்குறையிது தீருமாறு,பின் அன்னை தேடிவைத்த புவிதலத்தையும் அரசிருப்பையும்மண்ணென நஞ்சென மறுத்து வெறுத்தவங் நற்புகழ்ப் பரதன், வனம் புக்கிருந்த தனதண்ணலைச் சென்று கொணர்ந்து பொன்முடி கவிக்கவே முரசறைந்து தன் சேனையைத் திரட்டியநாள், பெருமகனைத் திருமகளோடு காணு மவாவினால்,

437 பக்கத் தொடர்ச்சி.

எழுந்தது பெரும்படை யேழு வேலையின்
மொழிந்தபே ரூழியின் முழங்கி முந்தெழ
அழிந்தது கேகயன் மடந்தை யாசைபோய்க்
கழிந்தது துயர்...

[பிரளயகாலத்தில் ஏழு கடல்களும் முழங்குவதுபோல் முழங்கிக்கொண்டு அந்தப் பெரிய படை எழுந்தது. அவ்வளவில், கைகேசி வளர்த்திருந்த ஆசையெல்லாம் அடியோடு அழிந்தது. பிரிவுற்றிருந்த இவர் துயரமும் தீர்ந்தது]

என்ற பெற்றியால், கேகயன் மடந்தையினாசை யழிந்ததுபற்றி ஊழிக்கடல் கிளர்ந்ததெனு முவமத்தை அமையச் செப்பியுள திறத்தினை யொருவரு மறந்திடார்.

மற்று, இற்றைநாள் மிதிலை முன்னினார் தம் எழுச்சியால் யாருக்குமோ ரூறு செய்திலர். அன்னார் நினைந்தது மன்பு, செய்தது மன்பு, செல்லுறு நெறியில் விளைந்தது மன்பே. மாதர்க்கும் மைந்தருக்கும் மிகுந்த காதலே கைதந் தழைத்தது. அழகிய நங்கையை வியப்பார் சிலர். வியந்து அவள் புதிய காதலைப் பெறுவார் சிலர். பெற்றிருந்த காதலைப் போற்றுவார் சிலர். ஊடுவார், கூடுவார், பாடுவார், பொழிலிலும் புனலிலும் மதுவினாலும் ஆடுவார் சிலர். இன்னண மொன்றல பல வின்பங்களை நுகர்ந்து சென்றவர் மிகுதியைக் கம்பர்,

உழுந்திட விடமிலை யுலக மெங்கணும்
அழுந்திய வுயிர்க்கெலா மருட்கொம் பாயினான்
எழுந்தில னெழுந்திடைப் படருஞ் சேனையின்
கொழுந்துபோய்க் கொடிமதில் மிதிலை கூடிற்றே.

[உயிர்களுக்கெல்லாம் அருளென்னும் ஓர் அசையாத ஊன்றுகோல் போல்வானான தயாதன் இன்னும் தன் ஆதனத்தை விட்டுக்கூட எழுந்திருக்கவில்லை. அதற்குள் அவனது ஆக்கினையினால் புறப்பட்டு, உலகத்தில் ஓர் உழுந்து போட இனி இடமில்லை யென்னும்படி அடர்ந்து சென்ற அப்பரிவாரத்தினது தலைப்புப்போய்க் கொடிகள் கட்டிய மதிலையுடைய மிதிலைநகரைச் சேர்ந்து விட்டது]

என இனிது காட்டினார். படரும் சேனை என்றதற்கேற்ப வதன் முன்னணியைக் கொழுந்தெனுஞ் சொற்கொண்டழைத்த அழகின் அருமையால் இச்செய்யுள் திகழ்கின்றது. நினைத்த வளவிலேயே மனத்தின்கண் ஒருவகை யழகினைத் தவழவைக்கும் இசையும் கருத்தும் வாய்ந்த தமிழ்ச்சொற்களுள் இக்கொழுந்து என்னும் மொழியும் ஒன்று. மொழியெனும் நலத்தினால் மனமுக படாத்தினில் ஓவியம் வனையுமிவ் வருந்தமிழ்க் கலைஞர், கொழுந்து என்னும் இவ்வொரு சொல்லினது அழகிற் கழகுசெய்வாராய் வண்ணம் பலதீட்டி அதனைத் தம் காப்பியத்துள் சிறக்க வைத்துளர். புனிற்றிள மகவாய இராமனைக், "கருமுகிற் கொழுந்தெழில் காட்டும் சோதி" என வழைத்து மேகத்திற்கோர் கொழுந்திழைத்து வளரவைப்பார். அகிற்புகையும் வேதிய ராகுதிப்புகையும் விரவியோர் மலையின்கண் படர்கின்ற தோற்றத்தைக், "கரியமால்வரைக் கொழுந்தெனப் படர்வ காணாய்" எனக் காட்டிப் பருப்பதத்தினின்று கொழுந்தொன்று போக்குவார். முகிற்கும்வரைக்கும் கொழுந்து கொடுத்தவர், "முளைக்கலாமதிக் கொழுந்துபோலும் வாண் முகத்தினான்" எனச் சந்திரனில் தளிர்தழைக்கக்கண்டது அருமையன்று. மேகத்தின் முன் படர்கின்ற பாகத்தைக் கொழுந்தென வழைக்கலாம்; குன்றினின்றெழும் புகை அதன் கொழுந்தே போல் தோன்றலாம் ; மதியென்பது ஒரு பொருளாதலால் அதனின்று ஒருபோது கொழுந்துபடரினும் படரலாம் ; மற்றுக், "கொழுந்தோடிப் படர்கீர்த்திக் கோவேந்தன்" என்று தயாதனை வியக்குமச் செவ்வியிற் கம்பர், கீர்த்திக்குமோர் கொழுந்து கற்பிக்கும் புலமையால் தன்னையே தான் விஞ்சி நிற்கின்றார்.

இன்னவாறு கம்பர் கொழுந்தெனும் ஒரு மொழியைப் பன்னய மமையப் பயின்றுள பெருமையை நினைக்குங்கால், தமிழிலக்கிய மரபுளோர் சிலர் தாம் தாம் வழங்கிய சில மொழிகளின் அழகுபற்றி அம்மொழியினையே தம் பெயராகப் பெற்று விளங்கியோர் நம்மனத் தரங்கினில் வந்துட னடமாடுகின்றனர்.

ஒல்லையூர் கிழான்மகன் பெருஞ்சாத்தனைப் பாடியவொரு புலவர் கழிந்த இளமைக் கிரங்கித் தன் முதுமையின் தன்மையை உரைப்பாராய்,

தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்
றிருமிடை மிடைந்த சிலசொற்
பெருமூ தாளரே மாகிய வெமக்கே.

[பூண் கட்டிய தலையையுடைய பெரிய தண்டுக்கோலை யூன்றித் தளர்ந்து இருமலுக்கிடையே இரண்டொரு சொற் பேசும் வயோதிகர் ஆகிய எங்களுக்கு—(இளமை எங்கு இருக்கின்றதோ]

என்றதில் 'தொடித்தலை விழுத்தண்டு' என்னுமப் பன்மொழித்தொடரில் நயங்கண்டவர் அவரைத் 'தொடித்தலை விழுத்தண்டினார்' என்று அழைக்கலாயினார் என்பர். இச்சொற்களில் நயம் பெரிது காண இயலாதார், மொழிகளின் அமைப்புக் கிடக்க அக்கிழப்புலவர் ஊன்றிய தடியினாலப் பெயர் பெற்றனர் என்றமைதி கொள்ளலாம்.

"பெருங்கையானை யிரும்பிடர்த்தலை யிருந்து" என்ற அடியொன்றைப் புனைந்ததற்காக ஒரு புலவர் இரும்பிடர்த்தலையார் என அழைக்கப்படலாகின்றனர். இது, சொல்லினழகிற்கோ, மற்றுப் பிடர்க்குப்பின் தலையென்ற சொல் சினைப்பெயர்போல் நிற்கின்றதெனினும் உண்மையில் அதுவெழுனுருபாகின்ற வித்தைக்கோ, தேர்தலருமை. இன்னொரு புலவர்,



முதுமரப் பொந்திற் கதுமென வியம்புங்
கூகை கோழி யானாத்
தாழிய பெருங்கா டெய்திய ஞான்றே

என்று பாடியதற்காகக் கூகைக் கோழியார் என்னும் பெயரின ராயினார். இது பொருளுரை யென்றும் பரிகாசம் என்றும் தெரிந்ததில்லை.

சிறுகாப்பிய மைந்தினு ளொன்றாய சூளாமணி இயற்றிய நற்றமிழ்ப்புலவர் அந்நூலின்கண், "தோலா நாவிற் சுச்சுதன்" என்று ஓரிடத்தும், "ஆர்க்குந் தோலாதாய்" என்று வேறோரிடத்தும் 'தோலா' என்னும் மொழியை வெல்லப்படாமைப் பொருளில் வழங்கியதன்பொருட்டுத் தன் இயற்பெயர் மறையத் "தோலாமொழித்தேவர்" எனவே இன்றைக்கு அறிமுகப்பட்டு நிற்கின்றனர்.

கம்பரது திருநாமம் நமக்கு இத்துணை அருமையா யமைந்திராவிடின் அவரை இம்மரபிற் கிணங்கக் கொழுந்தெழிலார் எனக் குறிக்கலாகலாம். எனினும், இதனையு மவர்க்கோர் 'செல்லப் பேராய்'ச் சேர்க்கத் தகும்.

இவ்வகை அயோத்திமுதல் மிதிலைகாறும் இடையறுது படர்ந்த அப்படையின் தோற்றத்தினையும் அதன்கண் நிகழ்ந்த பல சுவைமிகு நிகழ்ச்சிகளையும் நயமுறப் புனைந்துரைக்கின்றனர் கம்பர். வேந்தராற் பொலிந்த இரதங்கள் இரவிபோல் விளங்கின. ஓடையணிந்தசைந்த வேழங்கள் மின்னுடை முகில்கள் போன்றன. அன்னங்கள் பல பறப்பனபோல் வெண்குடைகள் விரிந்திருந்தன. அச்சேனை செல்லுகின்ற நெறியில் ஆடித்தொடர்ந்த துகிற்கொடிகள் அத்தானையைக் கடலென்று மயங்கி மேய்தற்கிறங்கிய வெண் மேகங்கள் போன்றன. மகளிரும் மைந்தரும் நெருக்கிச் செல்வதால் அவர் அணிந்திருந்த குங்குமக்குழம்பும் சாந்தும் உதிர்ந்து வீழ்ந்து கலந்திருத்தலால் செல்லும் நெறி அன்னார் துயிலும் பள்ளியே போன்றது. புரவியிலூர்ந்தனர் சில மாதர்; யானையிற் சென்றனர் அரிவையர் சிலர்.

மன்னணிப் புரவிகண் மகளி ரூர்வன
அன்னமுந் தியதிரை யாறு போன்றன
பொன்னணி புணர்முலைப் புரிமென் கூந்தலார்
மின்னென மடப்பிடி மேகம் போன்றவே.

[மாதர் ஏறிச் சென்ற, நிறைந்த அலங்காரங்களைச் செய்யப்பெற்ற குதிரைகள், அன்னப்பறவைகள் மிதக்கச் செல்கின்ற அலைகளையுடைய ஆறுகளைப் போன்றன. சுணங்கை அணிந்துள நெருங்கிய முலைகளையும் சுருண்ட மெல்லிய கூந்தலையுமுடைய மங்கையர் மின்னலாகவும் அவர் ஏறியிருந்த இளம் பெண்யானைகள் மேகமாகவும் தோன்றின.]

அன்னமெனத் தவழ்ந்தும் மின்னலென மிளிர்ந்தும் நல்லெழில் மங்கையிவர் செல்லுங்கால் விளைந்தவொரு விந்தையுடன் விளையாடுபவராய்க் கம்பர்,

முத்தினன் முழுநில வெறிக்கு மொய்ம்மணிப்
பத்தியா லிளவெயில் பரப்பும் பாகினுந்
தித்தியா நின்றசொற் சிவந்த வாய்ச்சியர்
உத்தரா சங்கமிட் டொளிக்குங் கூற்றமே

[சர்க்கரைப் பாகினும் தித்திக்கின்ற சொற்களைப்பேசும் சிவந்த வாயினையுடைய வனிதையர் தம் மேலாடையிட்டு மறைத்து வைத்திருக்கின்ற எமனானது, அணிந்திருந்த முத்து மாலையால் ஒரு சமயம் பூரண சந்திரனைப்போல்நிலவு வீசும்; மறு சமயம் அடர்ந்து அணிந்திருக்கும் இரத்தினங்களின் வரிசையால் இளவெய்யிலைப் பரப்பும்]

என்று காட்டலாகின்றனர். புலமையிற் பெருமை சான்றோர் உயரிய பொருளுஞ் சொல்லும் இருப்பன கண்டாராயின் அதனை எடுத்துத் தாம் நவில்தற்கு நா நல்கூர்ந்திடார். அவைகளைத் தம்மிடத்தே கண்டாலும் பாராட்டிக் கொள்வர்; பிறரிடத்தே கண்டாலும் பாராட்டுவர். உண்மையில் தம்முடைய பெருமையை உணர்ந்தார்தாமே பிறருடைய பெருமையையும் செவ்விதின் மதிக்க வல்லாராவர். கம்பர் அத்திறத்தவராதலால் இப்பாசுரத்தின் ஓசையில் தாமே ஈடுபட்டிருந்தாராகிப் பின் எழுநூறு செய்யுள்களுக்கப்பால் மந்திரைசூழ்ச்சிப் படலத்தில், "முத்தினின் முழுநில வெறிப்ப மொய்மணிப் பத்தியினிளவெயில் பரப்ப" என்று மீண்டும் முதலிரண்டடிகளின் எதிரொலியை எழுப்புகின்றனர். இவ்விதம் இவர் செய்தது இது வொன்று மாத்திரமே யன்று. முன் திருவவதாரப் படலத்திலேயே முதற்பாகத்தில் பதினைன்காவது பாசுரத்தில் வந்துள, "வீடினராக்கரென் றுவக்கும் விம்மலால்" என்ற அடியை மீண்டும் நூற்றேழாவது செய்யுளில் பயின்றிருக்கக் காண்கின்றோம்.

தன்னின்று எடுத்தாளத் தாழாத கம்பர், திருத்தக்கதேவர் மொழிகளைப் போற்றிப் பாராட்டுதற்குப் பின்னிடார். மாதர் முலையெனுங் கூற்றிற்கு இவர் இங்கு உத்தராசங்கமிட்டொளிக்கக் கற்றது 'சிந்தாமணியில்' இலக்கணையார்க்கு அவள் தாயர் செய்த சூழ்ச்சியினின்றே யாகும். அவ்வாறு மறைத்ததற்குக் காரணமும்,

வண்டலர் கோதை வாட்கண்
வனமுலை வளர்த்த தாயர்
கண்டுயி ருண்ணுங் கூற்றங்
கயிறுரீக் காட்டி யிட்டார்
உண்டுயிர் சிலர்கள் வாழ்கென்
றுத்தரா சங்கம் வைத்தார்
தெண்டிரை வேலி யெங்குந்
தீதின தாக மாதோ

என்ற அச் சிந்தாமணிச் செய்யுளிற் காணலாம். பின்னோரிடத்தில், "காலனைக் கண்புதைத் தாங்கு வெம்முலைக்கு மேலாடை வீக்கினார்" என்பர் தேவர். மறைவிடம் புக்கிருந்த இவ்வயோத்திமாதர் நெருங்கு பூண்முலை சும்மா விருந்தில.

வார்கு லாமுலை வைத்தகண் வாங்கிடப்
பேர்கி லாதுபி றங்கு முகத்தினன்
தேர்கி லானெறி யந்தரிற் சென்றொரு
மூரி மாமத யானையை முட்டினான்

[வார்கட்டிய முலைகளில் தைத்த கண்களைப் பெயர்த்துக்கொள்ள இயலாமல் களித்த முகத்தையுடையனாய் வழியையும் கவனிக்காமல் சென்று, ஒரு வலிய பெரிய யானையோடு முட்டிக்கொண்டான்]

ஒருவன். தம்பால் பேதுற்றழலு மன்னவர்களை நோக்கி நகுவனவென்ன இந்நகிலங்கள் முத்தினால் முழுநில வெறித்தன போலும். மற்றினி, அக்குழாத்தினுள் காமமாதிய கள்வரை வென்றவர் சிலர் இருந்தனர் என்பது,

குடையர் குண்டிகை தூக்கினர் குந்திய
நடையர் நாசி புதைத்தகை நாற்றலர்
கடக ளிற்றையுங் காரிகை யாரையும்
அடைய வஞ்சிய வந்தணர் முன்னினார்

[குடை பிடித்தவரும், கமண்டலம் தாங்கியவரும், குந்திய நடையுடையவரும், மூக்கில் புதைத்த கையினரும் ஆகி, மதயானைக்கும் மாதர்க்கும் அஞ்சி அகலப்போகும் அந்தணர் முற்பட்டு நடக்கலானார்]

என்ற செய்தியால் தெரியலாகின்றது. சுரமைநாட்டு "மங்கையர், நாவியும் குழம்பும் உண் நகிலம் நற்றவம் மேவி நின்றவரையும் மெலிய விம்முமே" என்றனர் சூளாமணியுடையார். அவ்வாறின்றி இங்கு அகலப் போயதற்கு இவ்வந்தணர்தம் நிறையின் மிகுதியே, காரணமாயிருக்கலாம். ஆயினும், வேளைவென்ற முகத்தியராய இக்கோசலத் தெரிவையர் வெம்முலைகள், அவ்வாள்கள் தம்மிற் குறைகண் டகல்கின்றனரெனக் கருதிய முனிவினால் சிவந்தனபோல் மொய்ம்மணிப்பத்தியால் இளவெயில் பரப்பி நின்றன என்னலு மொக்கும்.

## எம் சொந்தப் பிரசுரங்கள்.

சிறுவர் சிறுமியர்களுக்கு நல்ல தமிழில் எளிய நடையில் உயர்ந்த விஷயங்களைப்பற்றிஎழுதியுள்ள புத்தகங்களை வாங்கிக்கொடுத்து வாசிக்கச் செய்வது நலம். அதற்கு ஏற்ற புஸ்தகங்கள் இவை:—

### கோபால் புதிய தமிழ் வாசகம்.

ஆ. மா. ஸ்ரீ இராகவன் B.A., L.T., எழுதியது.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 1-ஆம் வகுப்பு | 0 | 2 | 6 |
| 2-ஆம் வகுப்பு | 0 | 3 | 0 |
| 3-ஆம் வகுப்பு | 0 | 4 | 0 |
| 4-ஆம் வகுப்பு | 0 | 4 | 6 |
| 5-ஆம் வகுப்பு | 0 | 6 | 0 |
| ஆஞ்சனேயர், பண்டிதர் - ம. குப்புசாமி முதலியார் எழுதியது | 0 | 5 | 0 |
| சிறுமணிக் கதைகள், எஸ். எஸ். அருணகிரிநாதர் எழுதியது | 0 | 5 | 0 |
| கம்பர் அல்லது கவியரசு, பண்டிதர் - அ. நா. கன்னையா எழுதியது | 0 | 5 | 0 |
| சிறுவர்களுக்கான இந்துதேச சரித்திரம், வி. ஜயாாமய்யர் B.A., L.T., எழுதியது | 0 | 5 | 0 |
| ஸிவிக்ஸ் அல்லது துரைத்தன விளக்கம் எஸ். சுப்பிரமணிய அய்யர் B. A. எழுதியது | 0 | 5 | 0 |
| தமிழ்ச் சிற்றிலக்கண வினவிடை, பண்டிதர்-கா. ரா. கோவிந்தராஜ முதலியார் எழுதியது | 0 | 4 | 0 |
| கோபால் வாய்ப்பாடு | 0 | 1 | 0 |
| புத்திமானே பலவான், (7-ம் பதிப்பு) ஏ. பரசுராமய்யர் எழுதியது. | 0 | 10 | 0 |
| கிருஷ்ணதேவராயர், கே. பி. சேஷாத்திரி ஐயங்கார் எழுதியது | 0 | 8 | 0 |
| பகீரதன், பண்டிதர் அ. நா. கன்னையா எழுதியது | 0 | 6 | 0 |
| பத்திராயு அல்லது ஆட்சிக்குரியோன், பண்டிதர் - மே. வீ. வேணுகோபால பிள்ளை எழுதியது | 0 | 6 | 0 |
| சூரவாதித்த சோழன், பண்டிதர் - ஆர். எஸ். சாம்பசிவசர்மா எழுதியது | 0 | 12 | 0 |
| இலங்கேசன், Y. சீனுவாஸய்யர் எழுதியது | 0 | 6 | 0 |
| முசுகுந்தன், திரு. மாணிக்கவாசகர் எழுதியது (அச்சில்) | 0 | 6 | 0 |

English publications.

| | | | |
|---|---|---|---|
| English Selections for Higher Forms by P. S. Sivaswami Iyer. B.A., L.T., | 0 | 12 | 0 |
| Nanda the Paraiah Saint by. C. S Rangaswami Iyengar B.A., L.T., | 0 | 3 | 0 |
| Fables from Mahabharata. by Paramasiva Iyer. B A., L.T., | 0 | 3 | 0 |

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

வேண்டும் புத்தகங்களுக்குக் கீழ்கண்டவிலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**B. G. PAUL & Co,**
**Publishars**
Francis Joseph Street, Madras.

## அமிர்த குணபோதினி

இதுபோன்ற நவீன அற்புத சஞ்சிகை வாசிப்பவ மனத்தைக் கவரத்தக்கதாய் இதுவரையில் தமிழில் வெளிவந்ததில்லை. ஜாதிமத வித்தியாசங்களின்றி யாவரையும் களிக்கச்செய்யும் வியாசங்கள் கொண்டது. பிரதி மாதமும் 56 பக்கங்களுடன் வெளிவரும்.

வருஷ சந்தா ரூபா 1. வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனும்.

10-ம் பதிப்பு] [வந்து விட்டது

## ஆங்கில ஆசான்

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்துவாங்குங்கள்.

60-நாட்களில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக் கூடிய விதமாய் அப்பியாசப் பாடங்களாக வகுத்து முன் பதிப்புக்களைவிட அதிக பக்கங்கள் சேர்த்துப் பெரிய எழுத்துக்களில் அச்சிட்டுள்ளோம். இதுவரையில் 53100 புத்தகங்கள் செலவாயிருப்பதாலேயே இதன் மேன்மை விளங்கும். இப்பத்தாம் பதிப்பு ஆங்கில ஆசான்போல் வேறு எந்தப் புத்தகங்களிலிருந்தும் அவ்வளவு சீக்கிரத்தில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள முடியாது. நமது முன் பதிப்புப் புத்தகங்களை வைத்திருப்பவர்கள்கூட 10-ம் பதிப்பைப் பார்த்தால் இதிலும் ஒன்று கட்டாயம் வாங்கவேண்டுமென்று எண்ணுவார்கள். இதில் 1-அணு முதல் 3000-ரூபா வரையில் சம்பளம், வாடகைக் கணக்கு உளது. 800-பக்கங்களுக்கு மேல் கொண்ட அழகிய சீமைகலிகோ பைண்டு விலை ரூபா 2.

**தி. இராஜகோபால் முதலியார், 302,**
தங்கசாலைவீதி, மதராஸ்.

## Our Publications.

**Kamban's Kosala.**

By T. N Seshachalam: A succint exposition of the poetic Art and the sublime Political Philosophy of Kamban as can be gleaned out of the first four chapters of Balakandam. Dr. James H. Cousins has written a foreword in terms of appreciation. Price Re. 1.

**Thoughts for Statesmen**

By T. N. Seshachalam. We who are making large strides towards democratic institutions may well pause and hear, what the great masters **Tocqueville** and **Montesquieu** have thought and said. Mr. S. Srinivasa Iyengar has introduced this book Price Rs. 1-8-0.

மேனாட்டுப் பேரறிஞர் நால்வர்.

கார்லைல், எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய் இவர்தம் கட்டுரைகள் சிலவற்றின் முதனூல் சுவை குறையா மொழிபெயர்ப்பு. விலை 0-8-0.

முப்பெரும் புலவர்.

கம்பர், காளிதாசர், ஷேக்ஸ்பியர் ஆகிய பெருங் கவிகள் ஜீவிய சரிதை. விலை அணா 4

உலக அதியசம். விலை அணா 4.

விசித்திர விளக்கு.

எளிய தமிழ் நடையிலான அலாவுதீன் என்னும் அரபிக்கதை. விலை அணா 6.

வாழ்க்கைச் சரிதை. விலை அணா 4.

Sambandar (English) விலை „ 4.

Vali (Do) விலை „ 4

**The Educational Publishing Co.,**
**Nungambakam, Madras.**




# வர்த்தமானம்

Rao Bahadur S. Rm. Ct. சபாரத்னம் செட்டியார்.—கானாடு காத்தான் ஸ்ரீ S. Rm. Ct. சபாரத்னம் செட்டியார் அவர்கள் ராவ்பகதூர் பட்டம்பெற்றதை, அன்னார் நண்பர் யாவரும் அறிய மகிழ்வடைவர்.

***

ஷாங்கையில் அடக்குமுறை:—கீழ்நாட்டு முன்னேற்றச் சபையில்சேர்ந்து இந்தியர்அரசியல்கிளர்ச்சி செய்தனர் என்று ஷாங்கையில் இருந்த 20 இந்தியர் பிரிட்டிஷ் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர் என்று ஷாங்கைச் செய்தி கூறுகின்றது.

***

அமேரிக்க நீக்ரோவின் நிலை:—அமெரிக்க ஐக்கிய மாகாணத்தில் டெனிஸ் என்னுமிடத்தில் இருந்த நீக்ரோ ஒருவன் ஐரோப்பிய மாதொருத்தியைத் தாக்கியகுற்றத்திற்காகச் சிறையிலிடப்பட்டான். இச்செய்தியை அறிந்த வெள்ளையர்கள் ஒன்றுகூடிச் சிறைக்குள் பலவந்தமாய்ச் சென்று கைதியாயிருக்கும் நீக்ரோவை அடித்துக் கொன்றனர், என்று ஒரு செய்தி கூறுகின்றது.

***

பிரிட்டிஷ் தேர்தல் முடிவு:—பிரிட்டனில் பார்லிமெண்டுத் தேர்தல் முடிவெய்தியது. இத்தேர்தலில் எதிர்பார்த்தபடி தொழிற்கட்சியினர் வெற்றிபெற்றனர். தொழிற்கட்சியில் 287 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரானபடியால் தொழிற்கட்சியினரே காபினட்டு சபையில் அதிகாரம் பெறுவர். கன்சர்வெட்டிவ் கட்சியினரின் தொகை 261. லிபரல் கட்சியில் 52பேரும், சுயேச்சைக் கட்சியில் 7பேரும் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். இந்திய அரசியல் திருத்த விசாரணைக் கமிட்டியின் தலைவரான ஸர் ஜான் சைமன் லிபரல் கட்சியனராய் வெற்றி பெற்றார். கம்யூனிஸ்டு கட்சியினராய் நின்ற ஸ்ரீமான் சக்லத்வாலா தோல்வியுற்றார்.

***

அன்னியர் உரிமை பாதுகாத்தல்:—இந்திய ஐரோப்பிய வர்த்தகச் சங்கத்தார், அன்னியநாட்டார் இந்தியாவில் அனுபவித்துவரும் சகல உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டுமென்று சைமன் கமிஷனுக்கு ஒரு மனு அனுப்பினர். அதனில் காணப்படும் விபரம் வருமாறு:—'இந்தியச் சட்டசபையோ, மாகாணச் சட்டசபைகளோ, முனிசிபல் சபைகளோ அல்லது வேறெந்த ஸ்தலஸ்தாபன சபைகளோ, மன்னரின் குடிகள் தற்காலம் அனுபவித்துவரும் எல்லா உரிமைகளைப் பாதிக்கும் வகையில் ஒன்றும்செய்யாது பார்த்துக்கொள்ளும்பொருட்டு விதிகள் செய்யப்படவேண்டும். அப்படி ஒரு வகுப்பார், ஒரு பிரிவார் சொத்து வியாபாரஉரிமைகளைப் பாதிக்கத்தக்க காரியங்கள் நடப்பின் இராஜப்பிரதிநிதியினிடம் அப்பீல் செய்து கொள்ளவும், அவர் செய்யும் முடிவை இந்திய ஸ்தாபனங்கள் ஏற்கவும் வேண்டும்.

சோக்கலிங்க வித்தியாசாலை, லேட்சுமிபுரம்:—இந்நகர் திருவாளர் ந. சொ. அருணசலன் செட்டியாரவர்களால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சொக்கலிங்க வித்தியாசாலையில் நாளது சுக்ல ஆண்டு வைகாசித் திங்கள் 11ம்நாள் வெள்ளிக்கிழமைகாலை 9மணிக்குத் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்பெற்றது. அஞ்ஞான்று, ஆசிரியர், மாணவர், மாணவிகள் மிக்கமகிழ்ச்சியுடன் திருவள்ளுவர்திருவுருவப்படத்திற்குப்பூஜை நைவேத்தியம் செய்து படத்தைக்கொண்டு தேவாரப் பாட்டுடன் நகர் வலமாய் அந்நகர் சிதம்பர விநாயகர் ஆலயம் சென்று தரிசனஞ்செய்து வித்தியாசாலையை அடைந்தனர். திரு. அருணசலன் செட்டியாரவர்கள் திருவள்ளுவர் ஜீவிய சரித்திரத்தை எடுத்துரைத்தார்கள். வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் திரு. கி. நாராயண சுந்தரமய்யங்காரவர்கள் திருக்குறளின் பெருமையைப் பற்றியும், கொத்தமங்கலம் ராம. சுப்பிரமணியன் செட்டியாரவர்கள் திருக்குறளின் பல பாகங்களில் பல பாக்களையும் எடுத்து ஒவ்வொருவர் மனத்திலும் அதன் பொருள்நயம் விளங்கும்படி பேசினர். முடிவில் சந்தனம் கற்கண்டு தாம்புலம் வழங்க வள்ளுவர் விழா நிறைவேறியது.

***

மதுவிலக்கு யோசனை:—சக்ரவர்த்தி ஸி. இராஜகோபாலாசாரியார், கலால் இலாக்கா மந்திரிக்கு மதுவிலக்கு விஷயமாகக் கூறும் யோசனை வருமாறு.-

சென்னை அரசாங்கத்தாரும், மந்திரியும் குடியை முழுதும் ஒழிக்கவே தாங்கள் முயல்வதாகக் கூறுகின்றனர். அவர்கள் கூறுவது உண்மையாயின், நான் கூறும் யோசனை யேற்பதற் கொத்ததாகும். எனது யோசனை அதிகச் செலவையும் கொண்டதன்று. அரசாங்கத்தார், குடியால் வரும் கேட்டை ஜனங்கள் அறியும் வண்ணம் பிரசாரம் செய்யவேண்டும். அரசாங்க உத்தியோக சாலைகளிலும் பொதுஸ்தாபனங்களிலும் உள்ள சுவர்களில், சர்க்கார் கையெழுத்திட்ட விளம்பரங்களை ஒட்டவேண்டும். கவர்னர் வசிக்குமிடத்தைச் சுற்றிலுமுள்ள சுவரில் மதுவிலக்குப் பிரசார விளம்பரங்களை ஒட்டவேண்டும். சிறைச்சாலைச் சுவரிலும் விளம்பரம் செய்யலாம். இப்படிச் செய்வதால் குடியை ஒழிப்பது அரசாங்கத்தார் விருப்பம் என்று அறியஇயலும். இது புதியதொன்றுமன்று.

ஸ்விட்ஜர்லாந்தில் மதுவிலக்கிற்காக அனுசரிக்கும் முறை போற்றத்தக்கது. தபாலாபீஸ் மூலமாகச் செல்லும் கடிதங்களின் மீது சாராயப் பொட்டியும் மண்டையோடும் எலும்பையும் கொண்ட முத்திரை போடப்படும். அதனடியில் 'குடிப்பது குடிகெடுக்கும்' என்று போட்டிருப்பர். இத்தாலியிலும், தபால் மீது 'மதுபானம் க்ஷயரோகத்தைத்தரும்'என்று முத்திரை போடுகின்றனர். சென்னை அரசாங்கத்தாரும் அந்நாடுகளைப் பின்பற்றுதல் நலம்.

REG. NO. M. 2324.

A MOMENTOUS BOOK

# ANCIENT JAFFNA

BY

**Mudaliar C. RASANAYAGAM, C. C. S.**

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

**Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.**

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical rnanner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

**Price Rs. 5-8-0 (V.P. Charges extra)**

*MANAGER:—*

***"KALANILAYAM"***

*11. VELLALA STREET.*

**Purasawalkam MADRAS**

189058

**1928**-ம் ஆண்டுப் பிரதிகள் பயிண்டு செய்தும் *கலா நிலயம்* செய்யாமலும் எம்மிடம் கிடைக்கும்

1. சேக்கிழாரும் கண்ணப்பரும்

*சேக்கிழார் திறனும், அன்பினது தத்துவமும், கண்ணப்பர் பக்திச் சிறப்பும் விளக்கும். T. P. மீனாட்சிசுந்தரம் M. A. B. L.—51 கட்டுரைகள்.*

2. கம்ப இராமாயணம்

*பாலகாண்டம், ஆற்றுப்படலமுதல் மிதிலைக்காட்சிப் படலம் வரை—T. N. சேஷாசலம், B. A. B. L. 51 கட்டுரைகள்.*

3. அகப்பொருள் வரலாறு

*காட்சிமுதல், ஓதற்பிரவு வரை—K. இராமரத்தம் ஐயர் B. A. 18 கட்டுரைகள்.*

4. காந்திமதி

*காவிய இயல்நலம் பெற்ற நற்றமிழ் நாவல். T. N. சேஷாசலம் B. A. B. L. 51 இதழ்களில் வந்துளது.*

5. தமிழ்ப்பாடம்

*நளவெண்பா,—சுயம்வர காண்டம் கலிதொடர் காண்டம். இந்த வருடத்தில் பெரும் பகுதி அணி இலக்கணமும், சொல்லிலக்கணமும் ஓதப்பட்டுளது.*

6. மேனாட்டுத் தத்துவ அறிஞர்

*பிரிடரிக் நீட்ஷேன் எபிகுயூரன் ஜினோன் பைரோன் அரிஸ்டால் முதலாயினோர்—T. R. இராஜகோபால்,*

7 இலகிய எற்ற ஆராய்ச்சி

*E. T. சொக்கம்மாள் B. A; L. T. எழுதியது 6 கட்டுரைகள்.*

8. தேவாரமும் ஐந்திணையும்

*தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்—E. N. தணிகாசல முதலியார் B. A. B. L. 8 கட்டுரைகள்*

9. மேனாட்டறிஞர் கட்டுரை (மொழி பெயர்ப்பு)

*கார்லைல், ரஸ்கின், எமர்ஸன், டால்ஸ்டாய் செஸ்டர்டன், ஆஸ்கார் ஒயில்டு, ராபர்ட்பர்ன்ஸ் முதலாவினோர்.*

10. இலக்கியக் கதைகள்

*புரந்தனர் பெருந்தவம், சித்ரகூடம், அகத்தியர், சூர்ப்பனகை.—R. முத்தையர்*

11. வானசாஸ்திரம்

*இதன் உண்மைகளை யாவரும் தெரிந்துகொள்ளும் வண்ணம் சுருக்கமாய் எளியநடையில் சொல்லப்பட்டுளது.—20 கட்டுரைகள்.*

மலர்வனம் பழமுதிர்சோலை

*சிந்தாமணி,சிலப்பதிகாரம்,மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுனூறு, முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலை அழகுகள்—14 கட்டுரைகள்.*

*நாலடி நானூற்றின் திறம், சிவகாமி சரித்திர ஆராய்ச்சி, பாரசீகப்புலவர் உமார்காயம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்களும் வந்துள்ளன.*

விலை விபரம—தபால் செலவு உள்பட:—

| | | | | |
|---|---|---|---|---|
| பையின்டு செய்யாதது | உள்நாடு ரூ | 8—0—0 | வெளிநாடு ரூ | 9—8—0 |
| ஆப்லெதர் கில்டுபயிண்டு | உள்நாடு ரூ | 10—0—0 | வெளிநாடு ரூ | 11—8—0 |
| காலிகோ பயிண்டு | உள்நாடு ரூ | 9—8—0 | வெளிநாடு ரூ | 11—0—0 |

கலா நிலயம் ஆபீஸ், 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)